கலைத் தமிழ் இலக்கணம்

முதற் புத்தகம் பகுதி II

நான்காம் படிவம் சிறப்புப் பகுதி

ஆசிரியர்
கலைப்பெரும் புலவர்
வித்துவான். **ஆ. குருசாமி ஐயா** அவர்கள்,
தலைமைத் தமிழ் ஆசிரியர்,
நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி,
கருவூர்.

தமிழ் நாடு நூற்பதிப்பகம்,
இலிங்காயத்தார் தெரு,
உறையூர் :: திருச்சிராப்பள்ளி.

உரிமைப் பதிவு] 1955 [விலை 0—7—0

T17554
R005K03

கலைத் தமிழ் இலக்கணம்

முதற் புத்தகம் பகுதி II

நான்காம் படிவம் சிறப்புப் பகுதி

27-1-54உ புதிய பாடதிட்டப்படி இலக்கணப் பகுதியும், சிறப்புத் தமிழ்க்குரிய சேர்க்கையும் அமைந்துள்ளன.

ஆசிரியர்
கலைப்பெரும் புலவர்,
வித்துவான். ஆ. குருசாமி ஐயா அவர்கள்,
தலைமைத் தமிழ் ஆசிரியர், நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி,
கருவூர்.

தமிழ்நாடு நூற்பதிப்பகம்.
இலிங்காயத்தார் தெரு,
உறையூர் – திருச்சிராப்பள்ளி.

உரிமை பதிவு] 1955 [விலை 0—7—0

முதற் பதிப்பு 1954.
இரண்டாம் பதிப்பு 1955.

Approved by the Madras Text Book Committee
(For class use for High school IVth Form Part II)
Vid Ft. St. George Gazette page 26. Date 4-5-55

Printed at The City Press, Tiruchi.

முன்னுரை

தமிழ் மொழியின் இயற்கைத் தன்மையையும், மேன்மையையும் நன்கு அறிவதற்கு இலக்கண அறிவு மிகவும் பயன்படுவதாகும். தமிழ் நாட்டு மொழியாகவும், முதன் மொழியாகவும், உயர்நிலைப்பள்ளிகளில் போதனா மொழியாகவும் அமைந்துள்ளதால் மாணவர்கள் தமிழில் சிறந்த அறிவும் தேர்ச்சியும் பெறுவதற்குத் தமிழ் இலக்கணத்தை நன்கு பயில வேண்டும்.

சிறப்புத் தமிழ்க்குரிய மதிப்பெண்கள் 100-ல் உரைநடை செய்யுட் பகுதிகட்கு 50-ம், இலக்கணப் பகுதிக்கு 25-ம், தன் முயற்சி (Self Effort) நலம் பாராட்டல் (Literary Appreciation) கற்பனையாற்றல் (Creative ability) இவற்றிற்கு 25-ம் ஆகப் பகுக்கப்பட்டுள்ளது. எனவே, சிறப்புத் தமிழில் இலக்கணத்திலும் பிறவகைகளிலும் மாணவர்கள் 50 மதிப்பெண்களைப் பெறவேண்டும்.

இதற்கேற்றவாறு 27–1–54-ல் அரசாங்கத்தார் புதிதாகத் திருத்தியமைத்த இலக்கண பாடதிட்டத்தை முற்றும் தழுவி இந்தச் சிறப்புத் தமிழ் இலக்கணம் விரிவாகவும், தெளிவாகவும் எழுதப் பெற்றுள்ளது. இலக்கணப் பகுதிகளில் வினாக்களுக்கு விடை எழுத வேண்டிய முறைகளும், நலம் பாராட்டல் முதலானவைகளை மாணவர்களுக்கு விளங்கும் வண்ணம் ஆசிரியர்கள் விளக்கும் முறைகளும், பாடப் பகுதியில் கேட்கவேண்டிய இன்றியமையாத வினாக்களும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழில் சிறந்த இலக்கண அறிவும், சிறப்புத் தமிழ்ப் பகுதியில் முதன்மையாகத் தேர்ச்சியும் பெற இவ்விலக்கணம் உறுதுணை புரியுமெனத் திண்ணமாக எண்

இங்ஙனம்,

ஆசிரியன்

T017554
Sarasvati Mahal Library, Th

27—1—54-உ கெஜட்டில் புதிதாகத் திருத்தி வெளியிட்ட இலக்கண பாடதிட்டம்.

(சிறப்புத் தமிழ்-பகுதி II)

பொருள் அடக்கம்

I. எழுத்து — பக்கம்

1. எழுத்துக்களுக்கு வரும் சாரியைகள் — 1
2. மாத்திரை — 3
3. சார்பெழுத்துக்கள் — 4
4. போலி வகைகள் — 8

II. சொல்

1. வடசொல் - தத்தி தாந்த நாமம் — 11-13
2. பெயர்ச்சொல் — 14
3. வினைச்சொல் — 19
4. இடைச்சொல் — 27
5 உரிச்சொல் — 30

III. பொது

1. தொகாநிலைத் தொடர்வகை — 31
2. தொகைநிலைத் தொடர்வகை — 33
3. குறிப்பும் வெளிப்படையும் — 38
4. வழுவமைதிகள் — 41

IV. புணர்ச்சி

1. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி — 44
2. இயல்பு புணர்ச்சி — 49
3. தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி — 52

V. யாப்பு

1. நால்வகைப்பாக்களின் பொது இலக்கணம் — 53
2. அசை, சீர் இவற்றின் இலக்கணமும், வாய்ப்பாடும். — 56

VI. அணி

1. உவமைகளுள் சில — 62
2. வேற்றுப் பொருள் வைப்பு அணி — 64
3. உருவகங்களுள் சில — 65

சிறப்புத் தமிழ்க்குரிய சேர்க்கை — 67

வினாக்கள் — 70

கலைத் தமிழ் இலக்கணம்

நான்காம் படிவம் (Form IV)

பகுதி II சிறப்பு (Part II)

I. எழுத்து

---

1. எழுத்துக்களுக்கு வரும் சாரியைகள்

தமிழில் உள்ள எழுத்துக்களில் மெய்யெழுத்துக் களைத் தனியாக ஒலிக்க வியலாது. அவற்றை ஒலிக் கத் துணையாய்ச் சார்ந்து வரும் எழுத்து **சாரியை** எனப்படும்.

உயிர் எழுத்துக்களும், உயிர்மெய்களும் தனியாக ஒலிக்குமாயினும், சில வெழுத்துக்கள் சிலவற்றைச் சாரியைகளாகப் பெற்றுவரும். இவ்வாறு வருவன **எழுத்துச்சாரியை** எனப்படும்.

வல்லினம் க ச ட த ப ற என ஆறே.

இதை வல்லினம் க், ச், ட், த், ப், ற் என ஆறே என்று கூறவேண்டும். இவ்வாறு ஒலிக்க வியலாமை யால், அ என்ற எழுத்தைச் சேர்த்து க, ச, ட, த, ப, ற என்று கூறினர்.

இவ்வாறே மெய்கள் அ என்னும் சாரியை பெற்று வரும்.

அகரம் முதல வெழுத்தெல்லாம் **கரம்** சாரியை.

ஆருமறியார் அ**காரம்** அவனென்று. **காரம்** சாரியை.

அஃ**கான்** முன்னர். ... ... **கான்** சாரியை.

உயிர்களில் **அ** என்னும் குற்றெழுத்து **கரம், காரம், கான்** என்னும் சாரியைகளைப் பெற்று வந்தது.

மற்ற குறில்களும் இவ்வாறே பெற்று வரும்.

ஆ**கார** இறுதி. ஐ**கார** ஔ**காரம்**. **காரம்** சாரியை.

உயிர்களில் ஆ, ஐ, ஔ என்னும் நெட்டெழுத்துக்கள் **காரம்** என்னும் சாரியை பெற்று வந்தன. பிற நெடில்களும் இவ்வாறே பெற்று வரும்.

ஐ**கான்** மூன்றே. ஔ**கான்** ஒன்றே. **கான்**சாரியை.

உயிர் நெடில்களில் ஐ, ஔ இரண்டுமட்டும் **கான்** சாரியையும் பெற்று வரும்.

ந**கரம்** இறுதி. ம**கரம்** இறுதி. **கரம்** சாரியை.

வ**கார** மிசையும் ம**காரம்** குறுகும். **காரம்** சாரியை.

மஃ**கான்** மூன்றே. வஃ**கான்**. **கான்** சாரியை.

உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் **கரம், காரம், கான்** என்னும் சாரியைகளைப் பெற்று வந்தன. இவ்வாறே பிறவும் பெற்று வரும்.

ஃ இது அஃகேனம். அ-கேனம் இரண்டும் சாரியை.

ஆய்த வெழுத்து முன்னே '**அ**'கரவுயிரையும், பின்னே '**கேனம்**' என்ற சொல்லையும் சாரியைகளாகப் பெற்று வரும்.

கா, சோ, தீ, பை. உயிர்மெய் நெடில்கள் சாரியை இன்றி வந்தன.

மெய்கள் 'அ' கரத்தையும், உயிர் நெடில்கள் 'காரம்' என்பதையும், 'ஐ, ஔ' என்னும் நெடில்கள் அதனுடன் 'கான்' என்பதையும், உயிர்க் குறிலும் உயிர்மெய்க் குறிலும் 'கரம், காரம், கான் என்பவற்றையும் சாரியைகளாகப் பெற்றுவரும். ஆய்தம் முன்னே 'அ' என்னும் உயிரையும், பின்னே 'கேனம்' என்ற சொல்லையும் சாரியைகளாகப் பெற்று வரும். உயிர்மெய் நெடில்கள் சாரியை பெறாமல் வரும்.

குறிப்பு: மெய்கள் அகரச்சாரியை பெறும் என்பதில் 'அ' என்பதுதான் சாரியை; 'கரம்' என்பது. 'அ, என்னும் உயிர்க்கு வந்த சாரியையாகும். குற்றெழுத்துக்களுடன் 'கான்' என்னும் சாரியை புணரும்போது இடையில் ஆய்தம் தோன்றும்.

நன்னூல்: மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்
ஐ ஔக் கானும் இருமைக் குறலிவ்
விரண்டொடு கரமுமாம் சாரியை பெறும் பிற.

2. மாத்திரை

ஒவ்வொரு வகையான பொருள்களையும் அளவிட்டறிவதற்கு ஒவ்வொரு வகையான அளவு கருவிகள் பயன்படுதலைப் போலவே, எழுத்துக்கள் ஒலிக்கின்ற காலத்தை அளந்தறிவதற்கு மாத்திரைபயன்படுகிறது.

ஒருமுறை கண்ணிமைத்தற்கு அல்லது கைந் நொடித்தற்குச் செல்லும் கால அளவு ஒரு மாத்திரை எனப்படும்.

எழுத்து ஒலிப்பதற்குரிய கால அளவு மாத்திரை ஆகும்.

உயிர்க் குற்றெழுத்திற்கு மாத்திரை ஒன்று.

உயிர் நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டு.

மெய்யெழுத்திற்கு மாத்திரை அரை.

ஆய்த வெழுத்திற்கு மாத்திரை அரை.

குற்றியலுகரத்திற்கும், குற்றியலிகரத்திற்கும் தனித்தனி மாத்திரை அரை.

உயிர்மெய்க் குற்றெழுத்திற்கு மாத்திரை ஒன்று.

உயிர்மெய் நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டு.

3. சார்பெழுத்துக்கள்

உயிரும், மெய்யுமாகிய முதலெழுத்தைச் சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் எனப்படும். அவை, பத்து வகைப்படும்.

1. **உயிர்மெய்:** க் + அ = க. இவ்வாறு மெய்யுடன் உயிர் சேர்ந்து (உயிரும் மெய்யும் சேர்ந்து) உண்டாகும் எழுத்து **உயிர்மெய்** எனப்படும்.

உயிரும் மெய்யும் சேர்ந்து உண்டாவது உயிர்மெய் எழுத்து ஆகும்.

குறிப்பு: உயிரின் சேர்க்கையால் இவ்வெழுத்து உண்டாவதால் உயிர்மெய் என உயிரை முன் வைத்துக் கூறப்பட்டது. எனினும், நிற்கும் முறைப்படி மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னுமாக ஒலிக்கும். உயிர்மெய்யைப் பிரிக்கும்போதும் மெய் முன்னும் உயிர் பின்னுமாக நிற்கும்.

2. **ஆய்தம்:** எஃகு. கஃசு. இச்சொற்களின் இடையில் மூன்று புள்ளி வடிவமாக வந்துள்ள

எழுத்து ஆய்தம் எனப்படும். இது, குற்றெழுத்திற்கும் உயிர்மெய் வல்லெழுத்திற்கும் இடையில் அவற்றைச் சார்ந்து வந்துளது.

குறிலுக்கும் வல்லின உயிர்மெய்க்கும் இடையில் மூன்று புள்ளி வடிவாய் வருவது ஆய்தம் ஆகும்.

3. **உயிரளபெடை** : தெய்வம் தொழாஅ அள். இதில் 'ழா' என்பதில் உள்ள 'ஆ' என்னும் நெடில் தனக்குரிய இரண்டு மாத்திரையின் மிக்கு மூன்று மாத்திரையாக ஒலிக்கிறது; மிகுந்தொலித்தமையை அறிதற்கு அதன் இனமாகிய 'அ' என்னும் குற்றெழுத்து வரி வடிவில் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு உயிர் நெடில் தன் அளவைவிட மிகுதியாக அளவு எடுத்து ஒலிப்பது **உயிரளபெடை** எனப்படும்.

உயிர் + அளபு + எடை = உயிரளபெடை.

உயிர் நெடில் தன் மாத்திரையின் மிக்கு ஒலிப்பது உயிரளபெடை ஆகும்.

4. **ஒற்றளபெடை** : இலங்ங்கு வெண்பிறை. இதில் இடையில் உள்ள 'ங்' கரமெய் தனக்குரிய அரை மாத்திரையின் மிக்கு ஒரு மாத்திரையாக ஒலிக்கிறது; மிகுந்தொலித்தமையை அறிதற்கு அம்மெய்யெழுத்தே மீண்டும் எழுதப்பட்டுளது.

இவ்வாறு ஒற்று தன் அளவைவிட மிகுதியாக அளவு எடுத்து ஒலிப்பது **ஒற்றளபெடை** எனப்படும்.

ஒற்று + அளபு + எடை = ஒற்றளபெடை.

ஒற்று (மெய்) தன் மாத்திரையின் மிக்கு ஒலிப்பது ஒற்றளபெடை ஆகும்.

* 5, குற்றியலுகரம்: சுக்கு, முத்து. இச்சொற்களின் இறுதியில் வல்லின மெய்யில் வந்துள்ள உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கிறது.

தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் உகரம், குற்றியலிகரம் ஆகும்.

* 6. குற்றியலிகரம்: நாடு + யாது = நாடியாது. இதில் குற்றியலுகரம் திரிந்து வந்த இகரம் மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.

தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் இகரம், குற்றியலிகரம் ஆகும்.

7. ஐகாரக்குறுக்கம்: ஐ, வளை இ. தனித்தும், அளபெடுத்தும் வந்துள்ள ஐகாரம் தன் மாத்திரையில் குறையாமல் ஒலிக்கின்றது.

ஐப்பசி, விரைவு, தவளை — இச்சொற்களில் முதல், இடை, கடையில் வந்துள்ள 'ஐ' காரம் தனக்குரிய இரண்டு மாத்திரையில் குறைந்து ஒரு மாத்திரையாக ஒலிக்கிறது. இவ்வாறு ஒலிப்பது **ஐகாரக்குறுக்கம்** எனப்படும்.

தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் ஐகாரம், ஐகாரக்குறுக்கம் ஆகும்.

8. ஔகாரக்குறுக்கம்: ஔ. தனித்துவந்த 'ஔ' காரம் தன் மாத்திரையில் குறையாமல் ஒலிக்கிறது.

---

* குற்றியலுகரம், குற்றியலிகரங்களைப்பற்றி நான்காம் படிவம் முதற்பகுதியில் (பொது) நன்கு விளக்கப்பட்டுள்ளன.

கௌவை, பௌவை இவற்றில் முதலில் வந்துள்ள 'ஔ'காரம் தனக்குரிய இரண்டு மாத்திரையில் குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு ஒலிப்பது **ஔகாரக் குறுக்கம்** எனப்படும்.

தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் ஔகாரம், ஔகாரக் குறுக்கம் ஆகும்.

குறிப்பு: ஐ. ஔ இரண்டும் தன்னைச் சுட்டிக்காட்டத் தனித்து வரும்போதும், அளபெடுத்து வரும்போதும் குறுகா; மற்றவிடங்களில் குறுகும். ஔகாரக் குறுக்கம் மொழி முதலில் மட்டும் வரும்.

9. மகரக்குறுக்கம்:

போன்ம் (போல் + ம் = போன்ம்) = போலும்.
மருண்ம் (மருள் + ம் = மருண்ம்) = மருளும்.

இவற்றில், லகர ளகர மெய்கள் திரிந்து வந்த னகர ணகர மெய்களின்முன் வந்துள்ள மகரமெய் தனக்குரிய அரை மாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கிறது. இவ்வாறு ஒலிப்பது **மகரக் குறுக்கம்** எனப்படும்.

தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் மகரமெய், மகரக் குறுக்கம் ஆகும்.

10. ஆய்தக் குறுக்கம்: அல் + திணை = அஃறிணை. முள் + தீது = முஃடீது. இவற்றில், தனிக்குறிலை அடுத்து வந்த லகர ளகர மெய்களின் முன் தகர உயிர்மெய் வந்து புணரும்போது லகர ளகர மெய்கள் திரிந்து வந்த ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையிற்

குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கிறது. இவ்வாறு ஒலிப்பது **ஆய்தக் குறுக்கம்** எனப்படும்.

தனக்குரிய மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும் ஆய்தம், ஆய்தக் குறுக்கம் ஆகும்.

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் எனச் சார்பெழுத்து பத்துவகைப் படுதல் காண்க.

இவை பத்தும் முதலெழுத்துக்களைச் சார்ந்து வரும் எழுத்துக்களாதலால் **சார்பெழுத்துக்கள்** எனப் பெயர் பெற்றன.

4. போலிவகைகள்

ஒரு சொல்லில் ஒரெழுத்தைப்போல மற்றொரெழுத்து பொருள் மாறுபடாமல் நிற்பது போலி ஆகும்.

(i) மொழி முதற் போலி

பயல்—பையல். மயல்—மையல். பசல்—பைசல். மஞ்சு—மைஞ்சு.	மொழி முதலில் அகரத்திற்கு ஐகாரம் போலி.
நயம்—ஞயம். நாயிறு—ஞாயிறு. நாண்—ஞாண். நேயம்—ஞேயம்.	மொழிமுதலில் நகரத்திற்கு ஞகரம் போலி.

மொழிமுதலில் அகரத்திற்கு ஐகாரமும், நகரத்திற்கு ஞகரமும் போலியாக வரும்.

மொழியின் முதலில் வரும் போலி, மொழிமுதற் போலியாகும்.

(ii) மொழியிடைப் போலி

அமச்சன்–அமைச்சன், அரயன்–அரையன், இலஞ்சி–இலைஞ்சி. } மொழியிடையில் அகரத்திற்கு ஐகாரம் போலி

ஐந்நூறு–ஐஞ்ஞூறு. சேய்நலூர்–சேய்ஞலூர் மைந்நின்ற–மைஞ்ஞின்ற. } மொழியிடையில் நகரத்திற்கு ஞகரம்போலி.

தைத்தான்–தைச்சான். தகரத்திற்குச் சகரம் போலி.
நீந்தினன்–நீஞ்சினன். நகரத்திற்கு ஞகரமும், தகரத்திற்குச் சகரமும் போலி.

மொழியிடையில் அகரத்திற்கு ஐகாரமும், நகரத்திற்கு ஞகரமும், தகரத்திற்குச் சகரமும் போலியாக வரும்.

மொழியின் இடையில் வரும் போலி, மொழியிடைப் போலியாகும்.

(iii) மொழியிறுதிப் போலி

அகம்–அகன். முகம்–முகன். நலம்–நலன். கலம்–கலன். } மொழியிறுதியில் மகரத்திற்கு னரம் போலி.

திறம்–திறல். பக்கம்–பக்கல். மகரத்திற்கு லகரம் போலி.

குடல்–குடர். பந்தல்–பந்தர். சாம்பல்–சாம்பர். } லகரத்திற்கு ரகரம் போலி.

மதில்–மதிள். செதில்–செதிள். லகரத்திற்கு ளகரம் போலி.

கொம்பு–கொம்பர். வண்டு–வண்டர். சிறகு–சிறகர். இடக்கு–இடக்கர்,	குற்றியலுகரத்திற்கு அர் போலி.

மொழியிறுதியில் மகரத்திற்கு னகரமும் லகரமும். லகரத்திற்கு ரகரமும் ளகரமும், குற்றியலுகரத்திற்கு அர் என்பதும் போலியாக வரும்.

மொழியிறுதியில் வரும் போலி, மொழியிறுதிப் போலியாகும்.

கலந்துவரும் போலி

பித்து–பிச்சு. இடையிலும் இறுதியிலும் தகரத்திற்கு சகரம் போலி.

மெல்ல–மெள்ள ,, ,, லகரத்திற்கு ளகரம் போலி.

இவை இடை கடைப்போலி எனப்படும்.

ஐந்து—அஞ்சு. முதலில் ஐகாரத்திற்கு அகரம் போலி; இடையில் நகரத்திற்குச் சகரம் போலி; இறுதியில் தகரத்திற்குச் சகரம் போலி, மொழி முழுவதும் போலி. இது முற்றுப்போலி எனப்படும்.

மொழிமுதற்போலி, மொழியிடைப்போலி, மொழியிறுதிப் போலி எனப் போலி மூன்று வகைப்படும்.

II. சொல்

1. வடசொல்

வடமொழியில் உள்ள சிறப்பெழுத்துக்கள் ஜ, ஷ, க்ஷ, ஸ, ஹ என்பன. இவை தமிழ் மொழியில் இல்லை.

தமிழ் மொழியில் உள்ள சிறப்பெழுத்துக்கள் எ, ஒ, ற, ன, ழ என்பன. இவை வடமொழியில் இல்லை.

மற்ற எழுத்துக்கள் தமிழ் மொழிக்கும், வட மொழிக்கும் பொதுவாக வருவன.

இரு மொழிகளுக்கும் பொதுவான எழுத்துக்களால் ஆன வட சொற்கள் தமிழில் வரும்போது மாற்றமடையாமல் வரும். இவ்வாறு வருவது தற்சமம் எனப்படும்.

தற்சமம்—அதற்குச் சரியானது.

வட சொல்—தமிழில்-தற்சமம்,

கமலம்	— கமலம்	}	பொதுவான எழுத்துக்களால் ஆகிமாற்றமடையாமல் வந்தன.
அமலம்	— அமலம்		
குங்குமம்	— குங்குமம்		

வடமொழியின்சிறப்பெழுத்துக்களாவன ஜ ஷ, க்ஷ, ஸ, ஹ என்னும் எழுத்துக்களால் ஆன வட சொற்கள் தமிழில்வரும்போது அவற்றிற்கேற்ற தமிழ் எழுத்துக்களாக மாற்றமடைந்து வரும். இவ்வாறு வருவது தற்பவம் எனப்படும்.

தற்பவம் — அதினின்றும் பிறந்தது, திரிந்தது.

(i) வட சொல் தமிழில் வரும்போது நிகழும் மாற்றங்கள்

வட சொல் — தமிழில் தற்பவம்.

ஜலம் — சலம் ஜானகி — சானகி	}	மொழி முதலில் ஜ—சகர மாகத் திரிந்தது.
பங்கஜம் — பங்கயம் புஜம் — புயம்	}	மொழியிடையில் ஜ-யகர மாகத் திரிந்தது.

'ஜ' முதலில் 'ச'கரமாகவும், இடையில் 'ய'காமாக வும் திரியும்.

ஷண்முகம்—சண்முகம். ஷ—சகரமாகத் திரிந்தது.

விஷம்—விடம். ஷ — டகரமாகத் திரிந்தது.

'ஷ' முதலில் 'ச'கரமாகவும், இடையில் 'ட'கர மாகவும் திரியும்.

பக்ஷம்—பக்கம். இடையில் க்ஷ—க்க எனத் திரிந்தது.
பக்ஷி—பட்சி. இறுதியில் க்ஷி—ட்சி எனத் திரிந்தது.
பிக்ஷை—பிச்சை. ,, க்ஷை—ச்சை எனத் திரிந்தது.

'க்ஷ' இடையில் இரு 'க'கரமாகவும் இறுதியில் 'ட'கரமாகவும் இரு 'ச'கரமாகவும் திரியும்,

குறிப்பு: காட்சி, மாட்சி, ஆட்சி முதலான சொற்கள் திரிந்து வந்தன வல்ல. இவற்றைக் காக்ஷி, மாக்ஷி, ஆக்ஷி என எழுதுதல் தவறு.

ஸமயம்—சமயம். ஸ—சகரமாகத் திரிந்தது.

வாஸம்—வாசம். ஸ—சகரமாகத் திரிந்தது.

மாஸம்—மாதம். ஸ—தகரமாகத் திரிந்தது.

'ஸ' முதலில் 'ச' கரமாகவும், இடையில் 'ச' கரமாகவும் 'த' கரமாகவும் திரியும்.

ஹரி-அரி ஹிமம்-இமம். ஹேமம்-ஏமம்.	முதலில் ஹ அதில் சேர்ந்துள்ள உயிர் ஆகி நின்றது.
தேஹம்-தேகம். மோஹம்-மோகம்	இடையில் ஹ-க கரமாகத் திரிந்தது.

'ஹ' முதலில் அதில் சேர்ந்துள்ள உயிராக வரும்; இடையில் 'க' கரமாகத் திரியும்

சில சொற்கள் இன்னும் பலவகைகளில் திரிந்து வரும்.

காட்டு: ஆத்மா-ஆத்துமா, ஆன்மா பர்வதம்-பருவதம், பருப்பதம் ஸ்வர்ணம்-சுவர்ணம், சொர்ணம், சபா - சபை. மாலா - மாலே.

(ii) தத்திதாந்தநாமம்

ஒரு வடசொல் சிறிது வேறுபட்டு தன்னேடு தொடர்புடைய பொருளே உணர்த்திவரும். இவ்வாறு வருவது **தத்திதாந்தநாமம்** எனப்படும்.

காட்டு: **ஜானகி**—ஜனகன் மகள்.
தாசரதி—தசரதன் மகன்.
காங்கேயன்—கங்கை மகன்.
கௌரவர்—குருமரபினர்.
பாண்டவர்—பாண்டுமரபினர்.
பாஞ்சாலி—பாஞ்சாலன் மகள்.

2. பெயர்ச்சொல்

(i) ஆகுபெயர் வகைகளுள் சில

1. **தாமரை முகம்.** இது, தாமரை மலரைப் போன்ற முகம் எனப் பொருள்படும். தாமரை என்பது முதற்பொருள். அது தன் சினைப்பொருளாகிய மலருக்கு ஆகிவந்தது. இவ்வாறு வருவது **முதலாகு பெயர்** அல்லது **பொருளாகு பெயர்** எனப்படும்.

முதற்பொருளின் பெயர் அதன் சினைப்பொருளுக்கு ஆகிவருவது முதலாகுபெயர் அல்லது பொருளாகுபெயர் ஆகும்,

காட்டு ; மல்லிகை சூடினாள்.

2. திருக்குறளை **உலகம்** புகழ்கிறது. உலகம் என்னும் இடத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய மக்களுக்கு ஆகிவந்தது, இவ்வாறு வருவது **இடவாகு பெயர்** எனப்படும்.

ஒரு இடத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகிவருவது இடவாகுபெயர் ஆகும்.

காட்டு : ஊர் அடங்கிற்று.

நாடு நகைக்கும்.

3. **கார்** விளைந்தது. இது கார் நெல் விளைந்தது எனப் பொருள்படும் கார் என்னும் காலத்தின் பெயர் அக்காலத்தில் விளையும் நெல்லுக்கு ஆகி வந்தது. இவ்வாறு வருவது **காலவாகுபெயர்** எனப்படும்.

ஒரு காலத்தின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகி வருவது காலவாகுபெயர் ஆகும்.

காட்டு: வேனில் மலர்ந்தது.

கார்த்திகை பூத்தது.

5. வெற்றிலை நட்டான். இது, வெற்றிலையின் கொடியை நட்டன் எனப் பொருள்படும். வெற்றிலை என்னும் சினைப் பொருளின் பெயர் அதன் முதற் பொருளாகிய கொடிக்கு ஆகி வந்தது. இவ்வாறு வருவது சினையாகுபெயர். எனப்படும். இது முதலாகு பெயர்க்கு மாறானது.

ஒரு சினைப்பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய முதற் பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயர் ஆகும்.

காட்டு: மருக்கொழுந்து நட்டான்.

புகையிலை பதியம் வைத்தான்.

5. வெள்ளை அடித்தான். இது, வெள்ளை நிற முடைய சுண்ணும்பு அடித்தான் எனப் பொருள்படும். வெள்ளை என்னும் நிறத்தின்–பண்பின் பெயர் அந் நிறத்தையுடைய சுண்ணும்புக்கு ஆகிவந்தது. இவ் வாறு வருவது பண்பாகு பெயர் அல்லது குணவாகுபெயர் எனப்படும்.

ஒரு பண்பின் பெயர் அப் பண்பினையுடைய பொருளுக்கு (பண்பிக்கு) ஆகி வருவது பண்பாகு பெயர் அல்லது குணவாகு பெயர் ஆகும்.

காட்டு: கருப்பு இரண்டும் உழுதன.
நீலம் சூடினுள்.

6. பொங்கல் உண்டான். இது, பொங்கிய உணவை உண்டான் எனப் பொருள்படும். பொங்கல் என்னும் தொழிலின் பெயர் அதனையடைந்த உணவுப் பொருளுக்கு ஆகி வந்தது. இவ்வாறு வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.

ஒரு தொழிலின் பெயர் அதனையடைந்த பொருளுக்கு ஆகிவருவது தொழிலாகு பெயர் ஆகும்.

காட்டு: வருவல் வாங்கினுன்.
பொரி விற்ருன்.

ஒரு பொருளின் பெயர் அதனேடு தொடர்புடைய வேருெரு பொருளுக்கு ஆகித் தொன்றுதொட்டு வழங்கிவருவது ஆகுபெயர் ஆகும்.

அது பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகு பெயர், சினையாகுபெயர், குணவாகுபெயர், தொழிலாகுபெயர் என அறுவகைப்படும்.

(ii) வேற்றுமைப் பொருள் வகை

முதல் வேற்றுமை

கந்தன் வந்தான். வினையைக் கொண்டது.
வேலன் அவன். பெயரைக் கொண்டது.
பொன்னன் யார்? வினுவைக் கொண்டது.

கந்தன், வேலன், பொன்னன், என்ற பெயர்கள் முதல் வேற்றுமையில் எழுவாய்களாக நின்று,

முறையே வினையையும், பெயரையும், வினாவையும்பயனிலைகளாகக் கொண்டு முடிந்தன.

ஒரு வாக்கியத்தில் எழுவாயாக வரும் திரிபில்லாத பெயரே முதல் வேற்றுமை ஆகும் வினையையும், பெயரையும், வினாவையும் பயனிலையாகக் கொண்டு வருதல் அதன் பொருளாகும்.

இரண்டாம் வேற்றுமை

தச்சன் பெட்டியைச் செய்தான்.

இதில், தச்சன் கருத்தா. செய்தல் கருத்தாவின் தொழில். செயப்படுவது—தொழிலின் பயனையடைவது பெட்டி. ஆதலால், பெட்டி செயப்படுபொருள் எனப்படும். ஐ என்னும் உருபு ஏற்ற பெயர் செயப்படுபொருளாக வருதலின் இது செயப்படுபொருள் வேற்றுமை எனவும் பெயர் பெறும்.

இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருளில் வரும். இதன் உருபு 'ஐ' என்பது.

மூன்றும் வேற்றுமை

வாளால் வெட்டினான். வாளான் வெட்டினான்.	ஆல், ஆன் உருபுகள் கருவிப் பொருளில் வந்தன.
அரசனால் ஆகிய கோயில். அரசனானாகிய கோயில்	ஆல். ஆன் உருபுகள் கருத்தாப் பொருளில் வந்தன.
தந்தையோடு மைந்தன் வந்தான். தாயொடு மகள் வந்தாள்.	ஓடு, ஒடு உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தன.

மூன்றும் வேற்றுமை கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருள்களில் வரும். இதன் உருபுகள் 'ஆல்' ஆன், ஒடு, ஓடு' என்பன.

நான்காம் வேற்றுமை

ஏழைக்குக் கொடுத்தான். எலிக்குப் பூனை பகை.	கு கொடைப் பொருள், பகைப்பொருள்.

நான்காம் வேற்றுமை கொடை முதலான பொருள்களில் இதற்கு இது என வரும். இதன் உருபு 'கு' என்பது.

ஐந்தாம் வேற்றுமை

மரத்தின் விழுந்த மலர். இன் நீங்கற் பொருள். பாலில் வெளியது கொக்கு. இல் ஒப்புப் பொருள். இமயத்தின் தெற்கு இந்தியா. இன் எல்லைப் பொருள். கருணையில் பெரியவர் காந்தி. இல் ஏதுப்பொருள்.

ஐந்தாம் வேற்றுமை நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருள்களில் வரும். இதன் உருபுகள் 'இன், இல்' என்பன.

ஆறும் வேற்றுமை

எனது வீடு எனது தலை. என கைகள்	அது, ஆது, அ என்னும் உருபுகள் கிழமைப்பொருளில் வந்தன.

ஆறும் வேற்றுமை கிழமைப்பொருளில் வரும். இதன் உருபுகள் 'அது, ஆது, அ' என்பன.

கிழமைப்பொருள்—உரிமையுடைய பொருள்.

ஏழாம் வேற்றுமை

வீட்டில் தங்கினான். ஊரின்கண் உள்ளான். என்னிடம் இருக்கிறது.	இல், கண், இடம் என்னும் உருபுகள் இடப்பொருளில் வந்தன.

ஏழாம்வேற்றுமை இடப்பொருளில் வரும். இதன் உருபுகள் 'இல், கண், இடம்' முதலியன.

எட்டாம் வேற்றுமை

மகனே! படி. ஈற்றில் ஏ மிகுந்தது

தலைவ! வருக. ஈற்றில் ன் கெட்டது.

அன்னாய்! தருக. ஈற்றில் ஐ-ஆய் எனத் திரிந்தது.

மக்காள்! வாழ்க. ஈற்றயல் திரிந்தது.

தம்பி! வா. இயல்பாக வந்தது.

எட்டாம் வேற்றுமை விளித்தல் பொருளில் வரும்.

விளிவேற்றுமையில் பெயர்கள் ஈறுமிகுந்தும், ஈறு கெட்டும், ஈறு திரிந்தும், ஈற்றயல் திரிந்தும், இயல்பாகவும் வரும்.

3. வினைச்சொல்

(i) வினைமுற்று வகைகள்

வேலன் உண்டான்: பள்ளிக்குச் செல்கிறான்; பாடம் படிப்பான். இவற்றுள் உண்டான், செல்கிறான், படிப்பான் என்னும் வினைமுற்றுக்கள் தொழிலும், காலமும் வெளிப்படையாகத் தெரியும் நிலையில் வந்துள்ளன. ஆதலால், இவை தெரிநிலை வினைமுற்றுக்கள் எனப்படும். தெரிநிலை வினைமுற்றுக்கள் மூன்று காலத்தையும் காட்டும்.

காட்டு: செய்தான், செய்தன. இறந்தகாலம்.

செய்கிறாள், செய்கின்றன. நிகழ்காலம்.

செய்வான், செய்யும். எதிர்காலம்.

தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தோன்ற நிற்பது தெரிநிலை வினைமுற்று ஆகும். அது இறந்தகால வினைமுற்று, நிகழ்கால வினைமுற்று, எதிர்கால வினைமுற்று என மூன்று வகைப்படும்.

அவன் பொன்னன். இவன் கரியன். அது சிறியது. இவற்றுள் பொன்னன், கரியன், சிறியது என்னும் வினைமுற்றுக்கள் தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்தாமல் குறிப்பால் உணர்த்துகின்றன. ஆதலால், இவை குறிப்பு வினைமுற்றுக்கள் எனப்படும்.

தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தோன்றாமல் குறிப்பால் உணர நிற்பது குறிப்பு வினைமுற்று ஆகும். அது முக்காலத்திற்கும் பொதுவாக வரும்.

தெரிநிலை வினைமுற்று, குறிப்புவினைமுற்று என வினைமுற்றுக்கள் இரண்டு வகைப்படும்.

தெரிநிலை வினைமுற்று மேலும் தன்மைவினைமுற்று, முன்னிலைவினைமுற்று, படர்க்கைவினை முற்று எனவும் மூவகைப்படும்.

காட்டு: படித்தேன். படித்தோம். தன்மை.
வந்தாய். வந்தீர். முன்னிலை.
படித்தான். படித்தாள். படர்க்கை.

(ii) எச்சவினை வகைகள்

பெயரெச்ச வகைகள்

உண்ட பையன். } உண்ட, படித்த என்பன இறந்தகாலப்
படித்த பாடம். } பெயரெச்சங்கள்.

படிக்கிற பையன். போகின்ற மனிதன்.	படிக்கிற, போகின்ற என்பன நிகழ் காலப் பெயரெச்சங்கள்.
செல்லும் மனிதன். ஓடும் குதிரை.	செல்லும், ஓடும் என்பன எதிர் காலப் பெயரெச்சங்கள்.

இவை, மூன்று காலத்தையும் உணர்த்திவருவதால் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.

இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம் எதிர்காலப் பெயரெச்சம் எனத் தெரிநிலைப் பெயரெச்சம் மூன்று வகைப்படும்.

நல்ல பொருள். சிறிய வழி. கரியமால்.

நல்ல, சிறிய, கரிய குறிப்புப் பெயரெச்சங்கள்.

தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் எனப் பெயரெச்சம் இரண்டுவகைப்படும்.

வினையெச்ச வகைகள்

உண்டு சென்றான். படித்து வந்தான். ஓடி வந்தது	உண்டு, படித்து, ஓடி என்பன இறந்தகால வினையெச்சங்கள்.
படிக்க வருகிறான் செய்யப் போகிறான்.	படிக்க, செய்ய என்பன நிகழ் கால வினையெச்சங்கள்.
செய்தால் தருவான். செய்யின் தருவான்.	செய்தால், செய்யின் என்பன எதிர்கால வினையெச்சங்கள்.

இவை மூன்று காலத்தையும் உணர்த்திவருவதால் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் எனத் தெரிநிலை வினையெச்சம் மூன்று வகைப்படும்.

பையச் சென்றான். இனிது நிகழ்ந்தது.

பைய, இனிது என்பன குறிப்பு வினையெச்சங்கள்.

தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என வினையெச்சம் இரண்டு வகைப்படும்.

(iii) எச்சங்களின் முடிபுகள்

பெயரெச்ச முடிவு

உண்ட மனிதன். செய்பவனைக் கொண்டு முடிந்தது.
உண்ட கலம். கருவியைக் கொண்டு முடிந்தது.
உண்ட வீடு. இடம்–நிலத்தைக் கொண்டு முடிந்தது.
ஓடிய ஓட்டம். தொழிலைக் கொண்டு முடிந்தது.
செய்த நாள். நாள்–காலத்தைக் கொண்டு முடிந்தது.
உண்ட சோறு. செயப்படு பொருளைக் கொண்டு முடிந்தது.

தெரிநிலைப் பெயரெச்சம் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும்.

வினையெச்ச முடிபு

உண்டு சென்றான். வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.
வந்து உண்டு சென்றான். வினையெச்சத்தைக் கொண்டது.
உண்டு சென்ற மனிதன். பெயரெச்சத்தைக் கொண்டது.
உண்டு வருதல் நல்லது. தொழிற்பெயரைக் கொண்டது.
உண்டு வந்தவன். வினையாலணையும் பெயரைக் கொண்டது.

தெரிநிலை வினையெச்சம் வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர். வினையாலணையும் பெயர் இவற்றுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

கண்ணன் வந்து, உண்டு, களைப்பாறிச் சென்றான். இவ்வாறு வினையெச்சங்கள் அடுக்கி வந்து முடிதலும் உண்டு.

(iv) தன் வினை, பிற வினைகள்.

பொன்னி வேலை செய்தாள்; பாடத்தைப் படித்தாள்.

இவற்றுள் செய்தாள், படித்தாள் என்னும் வினைகள், கருத்தாவாகிய பொன்னி தானே செய்த தொழிலை உணர்த்துகின்றன. இவை தன்வினைகள் எனப்படும்.

கருத்தா தானே செய்யும் வினை தன்வினை ஆகும்.

முருகன் நாற்காலி செய்வித்தான்.

இதில் செய்வித்தான் என்னும் வினை, கருத்தாவாகிய முருகன் பிறரைக் கொண்டு செய்வித்த தொழிலை உணர்த்துகின்றது. இது பிறவினை எனப்படும்.

கருத்தா பிறரைக் கொண்டு செய்விக்கும் வினை பிற வினை ஆகும்.

தன் வினை பிறவினையாகும் வகைகள்

(1) செய்—செய்வி; காண்—காண்பி.

செய்வினைப் பகுதிகள் வி, பி விகுதிகளில் ஒன்றைப் பெற்றுப் பிறவினை ஆயின.

	தன்வினை	பிறவினை	
(2)	போ	போக்கு	கு விகுதி பெற்றது.
	பாய்	பாய்ச்சு	சு ,, ,,
	உருள்	உருட்டு	டு ,, ,,
	தாழ்	தாழ்த்து	து ,, ,,
	எழு	எழுப்பு	பு ,, ,,
	துயில்	துயிற்று	று ,, ,,

தன்வினைப்பகுதிகள் கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகளில் ஒன்றைப் பெற்றுப் பிறவினை ஆயின.

	தன்வினை	பிறவினை	
(3)	இறங்கு	இறக்கு	தன்வினையின் இடையில் உள்ள மேல்லொற்று வல்லொற்றுகத் திரிந்துவந்தன.
	கலங்கு	கலக்கு	
	திருந்து	திருத்து	
	திரும்பு	திருப்பு	
	அழிந்தான்	அழித்தான்	
	மாய்ந்தான்	மாய்த்தான்	

தன்வினைகளின் இடையில் உள்ள மெல்லொற்று வல்லொற்றுகத் திரிந்து பிறவினை ஆயின.

	தன்வினை	பிறவினை	
(4)	உருகு	உருக்கு	தன்வினைப் பகுதியின் ஈற்று வல்லினம் இரட்டித்துவந்தன.
	ஓடு	ஓட்டு	
	தேறு	தேற்று	

தன்வினைப்பகுதிகளின் ஈற்றிலுள்ள வல்லினம் இரட்டித்துப் பிறவினை ஆகும்.

தன்வினைப் பகுதிகள், 'வி, பி' என்னும் பிறவினை விகுதிகளில் ஒன்றைப் பெற்றும், 'கு, சு, டு, து, பு, று' விகுதிகளில் ஒன்றைப் பெற்றும், தன்வினையின் இடையில்

உள்ள மெல்லொற்று வல்லொற்ருகத் திரிந்தும், நவ வினைப் பகுதியின் ஈற்று வல்லினம் இரட்டித்தும் பிறவினைகள் ஆகும்.

குறிப்பு: சில வினைகள் தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாக வரும். அவை தரும் பொருளைக்கொண்டு தன்வினையா, பிறவினையா என்பதை உணரவேண்டும்.

வெளுத்தான் என்பது. நோயால் உடல் வெளுத்தான் எனப்பொருள்படும்போது தன்வினையாகும்.

துணியை வெளுத்தான்—வெளுக்கச்செய்தான் எனப் பொருள்படும்போது பிறவினையாகும்.

(V) செய்வினை, செயப்பாட்டு வினைகள்.

பூனை எலியைப் பிடித்தது. இதில் பூனை எழுவாய் - கருத்தா. பிடித்தது என்ற வினைச்சொல் பூனை செய்த தொழிலை நேரே உணர்த்துகின்றது இவ்வாறு கருத்தா செய்த தொழிலை நேரே உணர்த்தும் வினை செய்வினை எனப்படும்.

எலி பூனையால் பிடிக்கப்பட்டது. (பிடியுண்டது)

இதில் எலி பிடித்தல் தொழிலைச் செய்யவில்லை. அதைச் செய்தது பூனையே. அத்தொழிலுக்கு உட்பட்டது - பிடிக்கப்பட்டது எலி. பூனை பிடிக்கும் தொழிலைச் செய்ய அதற்குட்பட்டது எலி.

இவ்வாறு கருத்தா செய்த தொழிலை நேரே உணர்த்தாமல் செயப்படுபொருள் அடைதலை உணர்த்தும் வினை செயப்பாட்டு வினை எனப்படும்

கருத்தாவின் தொழிலை நேரே உணர்த்தும் வினை செய்வினை ஆகும்; கருத்தாவின் தொழிலை நேரே உணர்த்தாமல் செயப்படு பொருள் அடைதலை உணர்த்தும் வினை செயப்பாட்டு வினை ஆகும்.

செய்வினை செயப்பாட்டு வினையாக வரும்போது ஏற்படும் மாறுதல்கள்

(1) செய்வினை செயப்பாட்டு வினையாக வரும்போது செய்வினைப் பகுதி படு, உண் என்னும் துணை வினைகளில் ஒன்றைப் பெற்றுவரும்.

(2) கருத்தாவிற்குரிய முடிபைப் பெறுமல் செயப்படு பொருளுக்குரிய முடிபைப் பெற்றுவரும்.

(3) செய்வினையில் முதல் வேற்றுமையில் வந்த கருத்தா செயப்பாட்டு வினையில் மூன்றும் வேற்றுமையில் வரும்.

(4) செய்வினையில் இரண்டாம் வேற்றுமையில் வந்த செயப்படுபொருள் செயப்பாட்டு வினையில் முதல் வேற்றுமையில் வரும்.

காட்டு : வேலன் நாயை அடித்தான். செய்வினை

நாய் வேலனுல் அடிபட்டது } செயப்பாட்டு
நாய் வேலனுல் அடியுண்டது } வினை.

அடி யென்னும் பகுதி படு, உண் இவைகளுள் ஒன்றைப் பெற்றது.

கருத்தாவாகிய வேலனுக்குரிய உயர்திணை முடிபைப் பெறுமல் செயப்படு பொருளாகிய நாய்க்குரிய அஃறிணை முடிபைப்பெற்று முடிந்தது.

முதல் வேற்றுமையில் வந்த வேலன் என்ற கருத்தா வேலனுல் என மூன்றும் வேற்றுமையில் வந்தது. நாயை என இரண்டாம் வேற்றுமை ஏற்று வந்த செயப்படுபொருள் நாய் என முதல் வேற்றுமையில் வந்தது.

4. இடைச் சொல்

(ஏ, ஓ, மற்று, தான்.)

ஏகார விடைச் சொல்

(1) அவர்களுள் இவனே தலைவன். இதில் ஏகாரம் ஒரு கூட்டத்தினின்று ஒருவனைப் பிரித்தலின் பிரிநிலைப் பொருளில் வந்தது.

(2) இதை நீ தானே செய்தாய்? இதில் ஏகாரம் வினைப் பொருளில் வந்தது.

(3) நிலமே, நீரே, தீயே, வளியே, வானே. இதில் ஏகாரம் எண்ணுப் பொருளில் வந்தது.

(4) தொழுவோமியாமே. இதில் ஏகாரம் ஈற்றசை யாக வந்தது.

(5) இது மெய்யே யாகும். இது பொய்யன்று; மெய்யாகும். எனத் தெளிவுபடுத்தலால் தேற்றப் பொருளில் வந்தது.

(6) "ஏயே இவளொருத்தி பேடியோ வென்றார்." இதில் ஏகாரம் வேறு பொருளின்றிச் செய்யுளில் இசை நிறைத்து நிற்றலின் இசைநிறைப் பொருளில் வந்தது.

ஏகார விடைச் சொல் பிரிநிலை, வினை, எண், ஈற்றசை, தேற்றம், இசை நிறை என ஆறு பொருள்களில் வரும்,

நன்னூல்: பிரிநிலை வினை எண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை யெனவா றேகா ரம்மே.

ஓகார விடைச் சொல்

(1) படிக்கவோ வந்தாய். இதில் ஓ படிக்க வரவில்லை; விளையாடுதற்கு வந்தாய். என ஒழிந்த சொற்களைத் தருதலின் ஒழியிசைப் பொருளில் வந்தது.

(2) அவனோ செய்தான்? இதில் ஓ வினாப் பொருளில் வந்தது.

(3) ஓ ஓ பெரியார். இதில் ஓ ஒருவரது பெருமையாகிய உயர்வின் மிகுதியைச் சிறப்பித்து நிற்றலால் உயர்வு சிறப்புப் பொருளில் வந்தது.

ஓ ஓ கொடியன். இதில் ஓ ஒருவனது கோடுமையாகிய இழிவின் மிகுதியைச் சிறப்பித்து நிற்றலால் இழிவு சிறப்புப் பொருளில் வந்தது.

(4) நானோ இத்தீமை செய்தேன் இதில் ஓ நான் செய்யவில்லை என எதிர்மறையில் நிற்றலால் எதிர்மறைப் பொருளில் வந்தது.

(5) ஆணோ அதுவும் அன்று; பெண்ணோ அதுவும் அன்று. இதில் ஓ ஆணும் பெண்ணும் அல்லாத அலித் தன்மையைத் தெரிவித்து நிற்றலின் தெரிநிலைப் பொருளில் வந்தது.

(6 ஓ ஓ அறிவிழந்தேன். இதில் ஓ கழிந்ததற்கு இரங்கலால் கழிவுப் பொருளில் வந்தது.

(7) கேண்மினோ. இதில் ஓ ஈற்றில் பொருளின்றி அசைநிலையில் வந்தது.

(8) அவருள் இவனோ பரிசு பெற்றான். இதில் ஓ பலருள்ளும் ஒருவனைப் பிரித்துக் காட்டலின் பிரிநிலைப் பொருளில் வந்தது.

ஓகார விடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை என எட்டுப் பொருள்களில் வரும்.

நன்னூல்: ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை
கழிவசை நிலைபிரிப் பெனவெட் டோவே.

மற்று என்னும் இடைச்சொல்

(1) "மற்றறிவாம் நல்வினை" இதில் மற்று என்னும் இடைச்சொல் நல்வினையை விரைந்து அறிவோம் என்னும் வினைக்கு மாறாக விரையாது பின்னர் அறிவோம் என்னும் பொருளைத் தருதலின் **வினைமாற்றுப் பொருளில்** வந்தது.

(2) மற்றென்னையாள்க. இதில் மற்று என்பது வேறு பொருளின்றி அசைநிலையாய் நிற்றலின் **அசைநிலையில்** வந்தது.

(3) இக்காய் வேண்டாம்; மற்றொன்றுதா.

இதில் மற்று என்பது வேறு என்னும் பொருளைத் தருதலால் **பிறிது** என்னும் பொருளில் வந்தது.

மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்றுப் பொருளிலும், அசைநிலையிலும், பிறிது என்னும் பொருளிலும் வரும்.

நன்னூல்: **வினைமாற்(று) அசைநிலை பிறிதெனும் மற்றே.**

தான் என்னும் இடைச் சொல்

(1) அவர்களுள் முருகன் **தான்** முதலில் ஓடினான். இதில் **தான்** என்பது மற்றவர்களினின்றும் முருகனைப் பிரித்துக் காட்டுதலால் **பிரிநிலைப் பொருளில்** வந்தது.

(2) இது**தான்** எனக்கு வேண்டும். இதில் **தான்** என்பது இதுவே வேண்டுமெனத் தெளிவுற நிற்றலால் **தேற்றப்பொருளில்** வந்தது.

(3) பொன்னைத்**தான்** மண்ணைத்**தான்** கொடுத்தானா? இதில் **தான்** என்பது பொன்னையாவது

மண்ணையாவது என விகற்பத்தை (வேறுபாட்டை) உணர்த்தி நிற்றலின் விகற்பப்பொருளில் வந்தது.

(4) சரிதான் என்றான். இதில் தான் என்பது வேறு பொருளின்றி வருதலின் அசைநிலையில் வந்தது.

தான் என்னும் இடைச்சொல் பிரிநிலை, தேற்றம், விகற்பம், அசைநிலை இவைகளில் வரும்.

5. உரிச் சொல்

(i) ஒரு பொருள் குறித்த பலசொல்

சாலப் பெரிது.	மிகுதியும் பெரியது.	சால
உறு புகழ் பெற்றான்.	மிகுந்த புகழ் பெற்றான்.	உறு
தவ முதியன்	மிகுதியும் முதுமையானவன்.	தவ
நனி தின்றான்.	மிகுதியாகத் தின்றான்.	நனி
இருள் கூர் யாமம்	இருள் மிகுந்த யாமம்.	கூர்
கழி கண்ணோட்டம்.	மிகுந்த கண்ணோட்டம்,	கழி

இவற்றுள் வந்துள்ள சால முதலான உரிச்சொற்கள் மிகுதி என்னும் ஒரு பொருளைத் தந்து நின்றன. இவ்வாறு வருவன ஒரு பொருள் குறித்த பல உரிச்சொற்கள் எனப்படும்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் சொற்கள் மிகுதி என்னும் ஒரு பொருளைக் குறித்து வரும் பல உரிச்சொற்கள் ஆகும். இவை ஒருகுணந் தழுவிய உரிச்சொற்கள் எனவும் பெயர் பெறும்.

நன்னூல்: சால உறு தவ நனி கூர் கழி மிகல்.

(ii) பல பொருள் குறித்த ஒரு சொல்

கடி நகர். (காவல்) கடி மலர். (நாற்றம்)

கடி வேல். (கூர்மை) கடி மார்பன். விளக்கம்

கடி யரமகளிர். (அச்சம்) கடி முரசு. (ஒலித்தல்)
கடி யரண். (சிறப்பு) கடி மது. (நீக்கம்)
கடி விடுதும். (விரைவு) கடி வினை (திருமணம்)
கடி காற்று (மிகுதி) கடி மிளகு (கரிப்பு)
கடி மணம். (புதுமை)

இவற்றுள் வந்துள்ள கடி என்னும் ஒரு சொல் பல பொருள்களைக் குறித்து நின்றது. இவ்வாறு வருவது பல பொருள் குறித்த ஒரு உரிச்சொல் எனப்படும்.

கடி என்னும் சொல் காப்பு முதலான பல பொருள்களைக் குறித்து வரும் ஓர் உரிச்சொல் ஆகும். இது பல குணம் தழுவிய உரிச்சொல் எனவும் பெயர் பெறும்.

இவ்வுரிச்சொற்கள் பெயரைச்சார்ந்துவரின் பெயர் உரிச்சொல் என்றும், வினையைச்சார்ந்துவரின் வினை உரிச்சொல் என்றும் பெயர் பெறும்.

நன்னூல் : கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்.

ஒரு பொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல் என உரிச் சொற்கள் இரண்டு வகைப்படும்.

III. பொது

1. தொகாநிலைத் தொடர் வகை

வேற்றுமை அல்வழி என்ற இரண்டு வகையிலும் சொற்கள் ஒன்றோடொன்று தொடரும்போது இடையில் வெற்றுமை உருபுகள் முதலானவை தொகாமல் தொடர்ந்து நிற்பது தொகாநிலைத்தொடர் எனப்படும்.

(i) வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

1. குடத்தை வனைந்தான். இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர்.
2. வாளால் வெட்டினான். மூன்றாம் வேற்றுமைத் ,,
3. எனக்குக்கொடுத்தான். நான்காம் வேற்றுமைத் ,,
4. மலையின் வீழ் அருவி. ஐந்தாம் வேற்றுமைத் ,,
5. எனது கை ஆறாம் வேற்றுமைத் ,,
6. வீட்டில் இருந்தான். ஏழாம் வேற்றுமைத் ,,

இவற்றுள் வேற்றுமை உருபுகள் தொகாமல் வெளிப்பட்டு நின்றன. இவ்வாறு வருவது வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் எனப்படும்.

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உள்ள ஆறு வேற்றுமைகளின் உருபுகள் இடையில் தொகாமல் வெளிப்பட்டு நிற்கச் சொற்கள் தொடர்வது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் ஆகும்.

(ii) அல்வழித் தொகாநிலைத் தொடர்

(1) கந்தன் வந்தான். எழுவாய்த்தொடர்.
(2) முருகா ! வா. விளித்தொடர்.
(3) படித்த பையன். பெயரெச்சதொடர்.
(4) படித்து வந்தான் வினையெச்சதொடர்.
(5) வந்தான் கந்தன். தெரிநிலை வினைமுற்றுத்தொடர்.
(6) பெரியன்முருகன் குறிப்புவினைமுற்றுத்தொடர்.
(7) மற்று ஒன்று. இடைச்சொற்றொடர்.
(8) நனி பேதை. உரிச்சொற்றொடர்.
(9) விடு விடு. அடுக்குத்தொடர்.

இவற்றுள் இடையில் உருபுகள் வராவிடினும் சொற்கள் ஒருமொழித்தன்மைப்படாமல் பிளவுபடத்

தொடர்ந்து நின்றன. இவ்வாறு வருவது அல்வழித் தொகாநிலைத்தொடர் எனப்படும்.

வேற்றுமையல்லாத வழியில் வரும் தொகாநிலைத்தொடர் அல்வழித் தொகாநிலைத்தொடர் ஆகும்.

எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்பு வினைமுற்றுத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என அல்வழித் தொகாநிலைத்தொடர் ஒன்பது வகை ஆகும்.

வேற்றுமைத் தொகாநிலைத்தொடர், அல்வழித் தொகாநிலைத்தொடர் எனத் தொகாநிலைத்தொடர் இரண்டு வகைப்படும்.

2. தொகைநிலைத் தொடர் வகை

வேற்றுமை, அல்வழி என்ற இரண்டுவகையிலும் சொற்கள் ஒன்றோடொன்று தொடரும்போது இடையில் வேற்றுமை உருபுகள் முதலானவை தொக்கி நிற்கத் தொடர்ந்து நிற்பது தொகைநிலைத்தொடர் எனப்படும்.

(i) வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்

(1) பாடம் படித்தான். இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.
(2) தலை வணங்கினான். மூன்றாம் வேற்றுமைத் ,,
(3) காடு சென்றான். நான்காம் வேற்றுமைத் ,,
(4) ஊர் நீங்கினான். ஐந்தாம் வேற்றுமைத் ,,
(5) அவன் கை. ஆறாம் வேற்றுமைத் ,,
(6) வீடு புகுந்தான். ஏழாம் வேற்றுமைத் ,,

இவற்றுள் வேற்றுமை உறுபுகள் தொக்கி (மறைந்து) நின்றன. இவ்வாறு வருவது **வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்** எனப்படும்.

இரண்டாம் வேற்றுமைமுதல் ஏழாம் வேற்றுமைவரை உள்ள ஆறு வேற்றுமைகளின் உருபுகள் இடையில் தொக்கிநிற்கச் சொற்கள் தொடர்வது வேற்றுமைத் தொகை நிலைத்தொடர் ஆகும்.

குறிப்பு: வேற்றுமை உருபோடு வேறு பயன்படும் சொற்கள் மறைந்து வருதலும் உண்டு. அவ்வாறு வருவது உருபும் பயனும் உடன்தொக்கதொகை எனப்படும்.

தயிர்க்குடம்—தயிரை உடைய குடம் என விரியும். இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

பொன் வளையல்—பொன்னால் செய்யப்பட்ட வளையல்என விரியும். இது மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

நோய் மருந்து—நோய்க்குத் தரும் மருந்து என விரியும். இது நான்காம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. இவ்வாறே பிறவுங் கொள்க.

நன்னூல்: இரண்டு முதலாம் இடையா றுருபும்
வெளிப்படலில்லது வேற்றுமைத் தொகையே.

(ii) அல்வழித் தொகைநிலைத் தொடர்

1. **வினைத்தொகை:** பாய்புலி. இதில் வினைக்குரிய காலம் தெரியவில்லை. இது பாய்ந்த புலி, பாய்கின்ற புலி, பாயும் புலி என முக்காலத்திலும் **விரியும்.** காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து, வினைப்பகுதி மாத்திரம் நின்று பெயரைக் கொண்டு முடிந்துளது.

இவ்வாறு வருவது வினைத்தொகை எனப்படும்.

அடுகளிறு, தோய் தயிர், இடிசுவர், செய்தொழில், கொல்யானை போன்றவைகள் வினைத்தொகைகளாம்.

காலங்காட்டும் இடைநிலையும் விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம் வினைத்தொகை ஆகும்.

நன்னூல்: காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

2. பண்புத்தொகை: செந்தாமரை. இது செம்மையாகிய தாமரை என விரியும். இடையில் மை என்னும் பண்பு விகுதியும், ஆகிய என்னும் பண்பை விளக்கும் உருபும் மறைந்து வந்தன. இவ்வாறு வருவது பண்புத்தொகை எனப்படும்.

கருங்கடல், வட்டக்கல், இன்சொல், வெண்மலர் போன்றவைகள் பண்புத்தொகைகளாம்.

சாரைப்பாம்பு. இது சாரை யாகிய பாம்பு என விரியும். ஒரு பொருளைக்குறிக்கும் சிறப்புப்பெயர்க்கும் பொதுப் பெயர்க்கும் இடையில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வந்தது. இவ்வாறு வருவது இரு பெயரொட்டுப் பண்புத் தொகை எனப்படும்.

பண்புப் பகுதிக்கும் பண்புகொள் பெயர்க்கும் இடையில் மை விகுதியுடன் பண்புருபும் மறைந்து வருவது பண்புத் தொகை ஆகும்.

ஒரு பொருளைக் குறிக்கும் சிறப்புப் பெயர்க்கும் பொதுப் பெயர்க்கும் இடையில் பண்புருபு மறைந்து வருவது இரு பெயரொட்டுப் பண்புத் தொகை ஆகும்.

நன்னூல்: பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்
ஒரு பொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை.

3. **உவமத்தொகை:** பவள வாய். இது பவளம் போன்ற வாய் என விரியும். உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையில் போன்ற என்னும் உவம உருபு மறைந்து வந்தது. இவ்வாறு வருவது உவமத் தொகை எனப்படும்.

மதிமுகம், மலர்க்கை, கொடியிடை, முத்துப்பல் போன்றவைகள் உவமத் தொகைகளாம்.

உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையில் 'போல, போன்ற' முதலான உவம உருபுகள் மறைந்து வருவது உவமத் தொகை ஆகும்.

நன்னூல்: **உவம உருபிலது உவமத் தொகையே.**

4. **உம்மைத் தொகை:** கபில பரணர். இது கபிலரும் பரணரும் என விரியும். நிலைமொழி வருமொழி இரண்டிலும் உம் என்னும் எண்ணிடைச் சொல் மறைந்து வந்தது. இது உம்மைத் தொகை எனப்படும்.

இராப்பகல், கைகால், சேர சோழ பாண்டியர் போன்றவைகள் உம்மைத் தொகைகளாம்.

நிலைமொழி வருமொழிகளில் 'உம்' என்னும் எண்ணிடைச் சொல் மறைந்து வருவது உம்மைத் தொகை ஆகும்.

நன்னூல்: **எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்**
எனும் நான்களவையுள் உம்மில தத்தொகை.

5. **அன்மொழித்தொகை:** மேலே கூறப்பட்ட தொகைகள் நிலைமொழி வருமொழிகளில் மறைந்து வந்தன. அவ்விரு மொழிகள் அல்லாமல் அத்தொகைகளின் புறத்து வேறு சொல் மறைந்து வருவதும் உண்டு. அது அன்மொழித்தொகை எனப்படும். அல்லாத மொழி தொக்கு நிற்பது அன்மொழித்தொகை.

அன்மொழித் தொகையைக் கூறும்போது அது தோன்றிய தொகையின் பெயரை முன் வைத்துக் கூறவேண்டும்.

1. **பூங்குழல்** வந்தாள். இது, பூவையணிந்த குழலினையுடைய பெண் என விரியும். இது இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

இவ்வாறே மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எழாம் வேற்றுமைகளின் புறத்தும் அன்மொழித்தொகை வரும்.

2. **தாழ்குழல்** சென்றாள். இது தாழ்ந்த குழலினையுடைய மாது என விரியும். இது, வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

3. **கருங்கண்** தந்தாள். இது, கருமையாகிய கண்ணையுடைய மங்கை என விரியும். இது பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

4. **கொடியிடை** நடந்தாள். இது, கொடிபோன்ற இடையினையுடைய நங்கை என விரியும். இது உவமத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

5. **உயிர்மெய்.** இது, உயிரும் மெய்யும் சேர்ந்து பிறந்த எழுத்து என விரியும். இது உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

வேற்றுமைத்தொகை முதலான ஐவகைத்தொகை மொழிகளுக்குப் புறத்தே வேறுசொற்கள் மறைந்து வருவன அன்மொழித்தொகை ஆகும்.

நன்னூல்: ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி.

வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என அல்வழித் தொகைநிலைத்தொடர் ஐந்துவகை ஆகும்.

வேற்றுமைத் தொகைநிலைத்தொடர், அல்வழித்தொகை நிலைத்தொடர் எனத் தொகைநிலைத்தொடர் இரண்டு வகைப்படும்.

நன்னூல்: வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை
அன்மொழி யெனவத் தொகையா றுகும்.

3. குறிப்பும், வெளிப்படையும்.

சொற்கள் பொருளுணர்த்துமிடத்து குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பொருள்களை உணர்த்தும். அவை முறையே குறிப்புச் சொற்கள், வெளிப்படைச் சொற்கள் எனப் பெயர் பெறும்.

குறிப்பால் பொருள் உணர்த்தும் சொற்கள்

1. ஒன்றொழி பொதுச் சொல்: இம் மாடுகள் பால் கறந்தன.

இதில் மாடுகள் என்னும் பொதுச் சொல், பால் கறந்தன என்னும் குறிப்பால் எருதுகளை ஒழித்துப் பசுக்களைக் குறிக்கின்றது. இவ்வாறு வருவது ஒன்றொழி பொதுச் சொல் ஆகும்.

2. விகாரம்: மரை மலர். இதில் மரை என்னும் சொல், குறிப்பால் தாமரையைக் குறிக்கின்றது. 'தாமரை' என்பதன் முதல்குறை விகரமே 'மரை' என நின்றது. இவ்வாறு வருவது விகாரம் ஆகும்.

3. தகுதி வழக்கு; வெளிக்குப் போனான்; கால் கழுவினான். இவை மலங்கழிக்கச் சென்றான், மலங் கழுவினான் என்ற பொருளைக் குறிப்பால் உணர்த்துகின்றன.

இவ்வாறு சொல்லத்தகாத இடக்கரான சொற்களைத் தகுதியான சொற்களைக் கொண்டு வழங்கி வருதல் **தகுதி வழக்கு** ஆகும்.

4. **ஆகுபெயர்: மருக்கொழுந்து** நட்டான். இதில் **மருக்கொழுந்து** என்னும் சொல், நட்டான் என்ற குறிப்பால் அதன் நாற்றுக்கு ஆகி வந்தது. இவ்வாறு வருவது **ஆகுபெயர்** ஆகும்.

5. **அன்மொழித் தொகை: தேன்மொழி வந்தாள்.** இதில தேன்மொழி என்னும் சொல், வந்தாள் என்னும் குறிப்பால் மொழியை உணர்த்தாமல் தேன் போன்ற மொழியையுடைய பெண்ணை உணர்த்திற்று. இவ் வாறு வருவது **அன்மொழித் தொகை** ஆகும்.

6. **குறிப்பு வினை:** இவன் இப்போது **பொன்னன்.** இதில் **பொன்னன்** என்னும் சொல், பெயர்ப் பொருளை ஒழித்துக் குறிப்பால் பொன்னையுடையவனாய் இருக் கிறான் என்னும் குறிப்புவினையை உணர்த்திற்று. இவ் வாறு வருவது **குறிப்பு வினை** ஆகும்.

7. **முதற் குறிப்பு: ஆத்திசூடி** படித்தான். இதில் **ஆத்திசூடி** என்னும் சொல் படித்தான் என்னும் குறிப் பால் அச்சொற்களை முதலிலே உடைய ஆத்திசூடி என்னும் நூலை உணர்த்திற்று. இவ்வாறு வருவது **முதற் குறிப்பு** ஆகும்.

8. **தொகைக் குறிப்பு: மூவர்** ஆண்ட தமிழ் நாடு. இதில் **மூவர்** என்னும் தொகைச் சொல், ஆண்ட என் னும் குறிப்பால் சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர்களை உணர்த்திற்று. இவ்வாறு வருவது **தொகைக் குறிப்பு** ஆகும்.

9. பிறகுறிப்பு: பாயா வேங்கை. இது வேங்கை மரத்தைக் குறிக்கின்றது

உவர்க் கடலன்ன செல்வர். பிறர்க்குப் பயன் படாதவர் என்பதைக் குறிக்கின்றது.

இங்ஙனம் பிற வகைகளில் குறிப்பால் பொருளுணர்த்தி வருவனவெல்லாம் பிறகுறிப்பு ஆகும்.

மேற்கண்ட வண்ணம் குறிப்பால் பொருளை உணர்த்தும் சொல் குறிப்புச்சொல் எனப்படும்.

குறிப்பால் பொருளுணர்த்தி வரும் சொல் குறிப்புச் சொல் ஆகும்.

ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதிவழக்கு, ஆகுபெயர், அன்மொழித்தொகை, குறிப்புவினை, முதற்குறிப்பு, தொகைக்குறிப்பு, பிறகுறிப்பு எனக் குறிப்புச் சொற்கள் ஒன்பது வகை ஆகும்.

வெளிப்படைச் சொற்கள்

மண், கடல், மலை, மரம், மனிதன், மக்கள், நாடு, நகரம், போ, வா, நட, உண், செய்தான், வந்தார், வந்தது, வந்தன. இவை குறிப்பாலன்றி வெளிப்படையாகப் பொருள்களை உணர்த்துகின்றன. ஆதலால், இவை வெளிப்படைச் சொற்கள் எனப்படும்.

வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும் சொல் வெளிப்படைச் சொல் ஆகும்.

நன்னூல் : ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப் பே
முதல் தொகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி அல்லன வெளிப்படை.

4. வழுவமைதிகள்—திணை, பால், இடம்.

ஒரு தொடரில் எழுவாயும் பயனிலையும் திணை, பால், இடங்களில் வழுவி (மாறுபட்டு) வரினும், சில காரணங்களால் அவை பொருந்தும் (அமைதியுடைய தாகும்) என்று ஆன்றோர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டவை வழுவமைதி எனப்படும்.

வழு-அமைதி=குற்றம் எனினும் அமைவது.

திணை வழுவமைதி

1. ஒரு பசுவை "என் அம்மை வந்தாள்" என்பது வழக்கம். இதில் மகிழ்ச்சியால் அஃறிணையாகிய பசு உயர்திணையாகக் கூறப்பட்டது.

2. பைங்கிளியார் தூது சென்றார். இதில் உயர்வினால் அஃறிணையாகிய கிளி உயர்திணையாகக் கூறப் பட்டது

3. தம் பொருள் என்ப தம் மக்கள் இதில் சிறப்பினால் உயர்திணையாகிய மக்கள் அஃறிணையாகக் கூறப் பட்டார்கள்.

4. அறிவில்லாதவன் மக்களுள் பதர் இதில் சினத்தினால் உயர்திணையாகிய அறிவில்லாதவன் அஃறிணை யாகக் கூறப்பட்டான்.

5 நாம் இறைன் உடைமை. இதில் இழிவினால் உயர்திணை அஃறிணையாகக் கூறப்பட்டது.

இவ்வாறு வருவது திணை வழுவமைதி எனப்படும்.

உவப்பு, உயர்வு, சிறப்பு, சினம், இழிவு முதலான காரணங்களால் ஒரு திணைப்பெயர் வேறு திணைமுடிபைப் பெற்றுவந்து அமைவது திணைவழுவமைதி ஆகும்.

பால் வழுவமைதி

1. தாய் மகனை "வா! அம்மா" என்பது வழக்கம்.

இதில் உவப்பினால் ஆண்பால் பெண்பால் ஆகக் கூறப்பட்டடது,

2. ஒருவனை "அவர் வந்தார்" என்று மரியாதையாகக் கூறுவது வழக்கம். இதில் உயர்வினால் ஒருமைப் பால் பன்மைப்பாலாகக் கூறப்பட்டது.

3. அருளுடைய அரசன் மக்கட்குத் தாய்.

இதில் சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

4. அவர் என்ன மனிதன்? இதில் சினத்தினால் உயர்வுப் பன்மைப்பால் ஒருமைப்பாலாகக் கூறப்பட்டது.

5. வீரமில்லாத இவன் ஒரு பெண்.

இதில் இழிவினால் ஆண்பால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

இவ்வாறு வருவது பால் வழுவமைதி எனப்படும்.

உவப்பு, உயர்வு, சிறப்பு, சினம், இழிவு முதலான காரணங்களால் ஒரு பாலுக்குரிய பெயர் வேறு பாலின் முடிபைப் பெற்று வந்து அமைவது பால் வழுவமைதி ஆகும்.

எண் வழுவமைதி

உடம்பு எல்லாம் நோகிறது. உடம்பு – ஒருமை; எல்லாம் – பன்மை.

இரண்டு கண்ணும் சிவந்தது. இரண்டு - பன்மை; சிவந்தது – ஒருமை.

இவ்வாறு ஒருமைக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையும் வருவது எண் வழுவமைதி எனப்படும்.

அது எல்லாம், அதுகள் என வருதல் பிழை.

ஒருமையில் பன்மையும் பன்மையில் ஒருமையும் வந்து அமைவது எண் வழுவமைதி ஆகும்.

இட வழுவமைதி

1. ஒரு தாய் தன் மகனுக்கு அறிவுரை கூறும் போது ',உன் தாய் சொல்கிருள் தடுக்காதே'' என்று கூறுகிருள். இதில் யான் சொல்கிறேன் எனச் சொல்ல வேண்டிய தன்மை இடத்தில் தாய் சொல்கிருள்என்னும் படர்க்கைச்சொல் வந்துளது. இது தன்மையில் படர்க்கை வந்தஇடவழுவமைதி இது தன்மைப் படர்க்கை எனப் பெயர் பெறும்.

2. அண்ணன் தன் தம்பியை நோக்கி ''எம்பியை ஈங்குப் பெற்றேன்'' என்று கூறுகிருன்.

இதில் நின்னை எனச் சொல்லவேண்டிய முன்னிலை யிடத்தில் எம்பியை என்னும் படர்க்கைச் சொல் வந்துளது இது முன்னிலையில் படர்க்கை வந்த இட வழுவமைதி. இது முன்னிலைப் படர்க்கை எனப் பெயர் பெறும். இவ்வாறு வருவது இடவழுவமைதி எனப்படும்.

ஓரிடத்திற்குரிய சொல் உணர்ச்சிமிகுதியால் வேறு இடத்தில் வந்து அமைவது இடவழுவமைதி ஆகும்.

நன்னூல் : உவப்பினும் உயர்விலும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால் திணை இழுக்கினும் இயல்பே.
ஒருமையிற் பன்பையும் பன்மையில் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே.

IV. புணர்ச்சி

1. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி

ஒன்று முதலாகிய எண்ணுப் பெயர்களுக்குமுன் எண்ணுப் பெயர்களும் பிறபெயர்களும் வந்து புணர்வது எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி எனப்படும்.

1. ஒன்று :

ஒன்று + குதிரை = ஒரு குதிரை ஒன்று + நாழிகை = ஒரு நாழிகை ஒன்று + வழி = ஒரு வழி	மூவினமும் வர ஒன்று என்பது ஒரு எனத்திரிந்தது.
ஒன்று + அம்பு = ஓரம்பு ஒன்று + ஆயிரம் = ஓராயிரம் ஒன்று + உடல் = ஓருடல்	உயிர் வர ஓர் எனத் திரிந்தது.

ஒன்று என்னும் பெயரின்முன் மூவினமும் வரும்போது ஈற்றுயிர்மெய் கெட்டு இடையில் உள்ள னகரமெய் ரகர மெய்யாகத் திரிந்து உகரச் சாரியை பெற்றுவரும்; உயிர் வரும்போது முதல் நீண்டு ஈறுகெட்டு இடை னகரம் ரகர மாகத் திரிந்து சாரியை பெறுது வரும்.

2. இரண்டு :

இரண்டு + கழஞ்சு = இருகழஞ்சு இரண்டு + நாள் = இரு நாள் இரண்டு + வாரம் = இரு வாரம்	மூவினமும் வர இரண்டு என்பது இரு எனத் திரிந்தது,
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம் இரண்டு + உயிர் = ஈருயிர்	உயிர்வர ஈர் எனத் திரிந்தது.

இரண்டு என்னும் பெயரின்முன் மூவினமும் வரும்போது ஈற்றுயிர் மெய்யும், ணகர மெய்யும், ரகரத்தில் உள்ள அகரமும் கெட்டு உகரச் சாரியை பெற்றுவரும்; உயிர் வரும்போது முதல் நீண்டு மற்றவை முன்போல் கெட்டுச் சாரியை பெறுது வரும.

3. மூன்று :—

மூன்று + தமிழ் = முத்தமிழ் மூன்று + நாடு = முந்நாடு மூன்று + வட்டம் = முவ்வட்டம்	மூவினமும் வர முதல் குறுகி ஈறு கெட்டு இடை னகரம் வந்த மெய் யாகத் திரிந்தது.
மூன்று + ஆயிரம் = மூவாயிரம் மூன்று + உலகு = மூவுலகு	உயிர்வர ஈறும் னகர மெய்யும் கெட்டன.

மூன்று என்னும் பெயரின்முன் மூவினமும் வரும்போது முதல் குறுகி ஈறுகெட்டு இடைனகரம் வந்த மெய்யாகத் திரிந்து வரும் : உயிர் வரும்போது ஈறும் இடைனகரமும் கெட்டு உடம்படுமெய் பெற்று வரும்.

மூன்று + வகை = மூவகை ஈறும் இடைனகரமும் கெட்டன.

மூன்று + யானை = முவ்யானை ஈறு கெட்டு னகரம் வகரமாகத் திரிந்தது.

இவ்வாறு வகரம் வரும்போது ஈறும் இடைனகரமும் கெட்டு முதல் குறுகாமலும், யகரம் வரும்போது முதல் குறுகி ஈறு கெட்டு இடைனகரம் வகரமாகத் திரிந்தும் வரும்.

4. நான்கு :—

நான்கு + அடி = நாலடி நான்கு + வகை = நால்வகை	உயிரும், இடையினமும் வர ஈறு கெட்டு னகரம் லகரமாகத் திரிந்தது.
நான்கு + கவி = நாற்கவி நான்கு + படை = நாற்படை	வல்லினம் வர ஈறு கெட்டு 'ன்' 'ற்' ஆகத் திரிந்தது.

நான்கு + மாடம் = நான்மாடம் மெல்லினம் வர ஈறு கெட்டுவந்தது.

நான்கு என்னும் பெயரின்முன் உயிரும் இடையினமும் வரும்போது ஈறுகெட்டு இடைனகரம் லகரமாகத் திரிந்து வரும்; வல்லினம் வரும்போது ஈறுகெட்டு னகரம் றகரமாகத் திரிந்துவரும்; மெல்லினம் வரும்போது ஈறுகெட்டு னகரம் திரியாது வரும்.

5 ஐந்து :—

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம் ஐந்து + வகை = ஐவகை	ஈறும் இடை நகர மெய்யும் கெட்டது.
ஐந்து + கலம் = ஐங்கலம் ஐந்து + பால் = ஐம்பால் ஐந்து + மூன்று = ஐம்மூன்று	ஈறு கெட்டு நகர மெய் வந்த மெய்க்கு இன மாகவும் வந்த மெய் யாகவும் திரிந்தது.

ஐந்து என்னும் பெயரின்முன் உயிரும் இடையினமும் வரும்போது ஈறும் இடைநகர மெய்யும் கெட்டு வரும்; வல்லினமும் மெல்லினமும் வர ஈறுகெட்டு இடைநகரமெய் முறையே வந்த வல்லினத்திற்கினமாகவும், வந்த மெல்லின மாகவும் திரித்து வரும்.

6. ஆறு :—

ஆறு + ஆயிரம் = ஆறாயிரம் ஆறு + பேர் = ஆறு பேர் ஆறு + முகம் = ஆறு முகம் ஆறு + வாரம் = ஆறு வாரம்	உயிரும் மூவினமும் வர இயல்பாய்வந்தது.
ஆறு + தொழில் = அறுதொழில் ஆறு + மீன் = அறுமீன் ஆறு + வகை = அறுவகை	மூவினம் வர முதல் குறுகியும் வந்தது.

ஆறு என்னும் பெயரின்முன் உயிர் வரும்போது இயல் பாகும்; மூவினமும் வரின் சிலவிடங்களில் இயல்பாகவும், சிலவிடங்களில் முதல் குறுகியும் வரும்.

7. ஏழு :

ஏழு + ஆயிரம் = ஏழாயிரம் உயிர் வர இயல்பாயிற்று.

ஏழு + கடல் = ஏழுகடல், ஏழ்கடல், எழுகடல். ஏழு + நாள் = ஏழு நாள், ஏழ் நாள். எழுநாள். ஏழு + வகை = ஏழு வகை, ஏழ் வகை, எழு வகை.	மூவினமும் வர இயல்பாயும், ஈற்றில் உகரம் கெட்டும், முதல் குறுகியும் வந்தது.

ஏழு என்னும் பெயரின் முன் உயிர்வரின் இயல்பாகும்; மூவினமும் வர இயல்பாகவும், ஈற்றில் உகரம் கெட்டும், முதல் குறுகியும் வரும்.

8. எட்டு :

எட்டு + இலை = எட்டிலை எட்டு + எட்டு = எட்டெட்டு எட்டு + கோடி = எட்டுக்கோடி எட்டு + நாள் = எட்டு நாள் எட்டு + யானை = எட்டியானை	சில உயிரும் மூவினமும்வர பொது விதிப்படி புணர்ந்தது.
எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம் எட்டு + இரண்டு = எண்ணிரண்டு எட்டு + கலம் = எண்கலம் எட்டு + நாழி = எண்ணாழி எட்டு + வகை = எண்வகை	சில உயிரும் மூவினமும் வர ஈறுகெட்டு இடை டகரம் ணகரமாகத்திரிந்தது.

எட்டு என்னும் பெயரின் முன் உயிரும் மூவினமும் வர சில விடங்களில் பொது விதிப்படி புணரும்; சில விடங்களில் ஈறு கெட்டு இடையில் உள்ள டகரம் ணகரமாகத் திரிந்து வரும்.

9, ஒன்பது ; ஒன்பது + ஆயிரம் = ஒன்பதாயிரம்
ஒன்பது + கோள்கள் = ஒன்பதுகோள்கள்
ஒன்பது + மணிகள் = ஒன்பது மணிகள்

ஒன்பது+வகை=ஒன்பது வகை
ஒன்பது+பத்து=தொண்ணூறு
ஒன்பது+நூறு=தொள்ளாயிரம்

ஒன்பது என்னும் பெயரின்முன் உயிரும் மூவினமும் வரின் பொது விதிப்படியும் இயல்பாகவும் புணரும். பத்து, நூறு என்னும் எண்ணுப் பெயர்கள் வந்தால் (1) வருமொழியாகிய பத்து நூறு ஆகவும், நூறு ஆயிரமாகவும் திரியும்; (2) நிலைமொழியில் உள்ள ஒரகர மெய்யுடன் தகர மெய் சேர்ந்து நிற்கும்; (3) பது என்பது நீங்கும்; (4) னகரமெய் முறையே ணகர மெய்யாகவும் ளகர மெய்யாகவும் திரிந்து நின்று பொதுப் புணர்ச்சி விதிப்படி முடியும்.

ஒன்பது+பத்து=(1) ஒன்பது நூறு. (2) தொன் பது நூறு. (3) தொன் நூறு. (4) தொண் நூறு. (5) தொண்ணூறு.

ஒன்பது + நூறு = (1) ஒன்பது ஆயிரம் (2) தொன்பது ஆயிரம். (3) தொன் ஆயிரம் (4) தொள் ஆயிரம். (5) தொள்ளாயிரம். தொள்ளாயிரம் தொளாயிரம் என மருவியது.

10. பத்து:

பத்து+ஆயிரம்=பத்தாயிரம் பத்து+பாட்டு=பத்துப்பாட்டு பத்து+நாள்=பத்து நாள் பத்து+வகை=பத்து வகை	உயிரும் மூவினமும் வர பொது விதிப் படிபுணர்ந்தது.

பத்து என்னும் பெயரின் முன் உயிரும் மூவினமும் வரின் பொது விதிப்படி புணரும்.

2. இயல்பு புணர்ச்சி

(ஈற்றெழுத்தின் வரிசைப்படி)

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் பன்னிரண்டு உயிர்களும் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொரு மெய்களும், குற்றிய லுகரம் ஒன்றும் ஆகும். இவ்வெழுத்துக்களை இறுதியில் உடைய மொழிகளுக்குமுன் வருமொழிகள் புணரும் போது இயல்பாக நின்று புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

உயிரீற்றுப் புணர்ச்சி

1. உண்ணிய + சென்றான் = உண்ணியசென்றான்.

வந்த + குதிரை = வந்த குதிரை.

ஓடின + மாடுகள் = ஓடின மாடுகள்.

தன + தாள்கள் = தன தாள்கள்.

பல + பெற்றான் = பல பெற்றான்.

அகர விற்று வினையெச்சம், பெயரெச்சம், பலவின்பால் வினைமுற்று, ஆறன் உருபு, பன்மைப் பெயர் இவற்றின்முன் வல்லினம் இயல்பாகும்.

2. விளா + பெரியது = விளா பெரியது.

ஆ + சென்றது = ஆ சென்றது.

மா + பெரிது = மா பெரிது.

கேண்மியா + கொற்றா = கேண்மியா கொற்றா.

உண்ணா + குதிரைகள் = உண்ணா குதிரைகள்.

சில ஆகாரவீற்றுப் பெயர்கள், மியா என்னும் அசைச் சொல், பலவின்பால் எதிர்மறை வினைமுற்று இவற்றின் முன் வல்லினம் இயல்பாகும்.

3. புலி + சிறியது = புலிசிறியது.
இடி + சுவர் = இடிசுவர்.
செடி + கொடி = செடிகொடி.

இகர விற்று எழுவாய்த்தொடர், வினைத்தொகை, உம்மைத்தொகை இவற்றின்முன் வல்லினம் இயல்பாகும்.

4. நீ + செய் = நீ செய். மீ + கண் = மீ கண்.

நீ, மீ, என்னும் ஈகாரவீற்றுச் சொற்களின்முன் வல்லினம் இயல்பாகும்.

5. அவனோடு + போ = அவனோடு போ.
எனது = பை = எனது பை.
சுடு + சோறு = சுடுசோறு.
அது + பார் = அதுபார்.

உகர விற்று மூன்றும் வேற்றுமை ஆறும் வேற்றுமை உருபுகள், வினைத்தொகை, சுட்டுப் பெயர் இவற்றின் முன் வல்லினம் இயல்பாகும்.

6. அவனே + சென்றான் = அவனே சென்றான்.
முருகனோ + போனான் = முருகனோ போனான்.

ஏகார ஓகாரவீற்று இடைச்சொற்களின்முன் வல்லினம் இயல்பாகும்.

மெய்யீற்றுப் புணர்ச்சி

1. மண் + பெரிது = மண்பெரிது.
பொன் + சிறிது = பொன்சிறிது.
மண் + கொண்டான் = மண்கொண்டான்.
பொன் + பெற்றான் = பொன்பெற்றான்.

ணகர னகர மெய்களின் முன் வல்லினம் சிலவிடங்களில் இருவழியிலும் இயல்பாகும்.

2. நாயும் + நரியும் = நாயும் நரியும்.

பூனையும் + யானையும் = பூனையும் யானையும்.

உம் என்பதில் உள்ள மகர மெய்யின்முன் மெல்லினமும் இடையினமும் இயல்பாகும்.

3. வேய் + பெரிது = வேய்பெரிது.

சீர் + சிறப்பு = சீர்சிறப்பு.

வீழ் + புனல் = வீழ்புனல்,

யகர ரகர ழகர மெய்களின்முன் எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை, வினைத்தொகைகளில் வல்லினம் இயல்பாகும்.

4. கல் + பெரிது = கல்பெரிது.

முள் + சிறிது = முள் சிறிது

லகர ளகர மெய்களின்முன் அல்வழியில் வல்லினம் இயல்பாகும்.

5. அவ் + யாவை = அவ் யாவை.

சுட்டடுத்த வகர மெய்யின் முன் இடையினம் இயல்பாகும்.

6. ஆடு + சென்றது = ஆடு சென்றது.

எஃகு + கடிது = எஃகு கடிது,

வரகு + கொடு = வரகு கொடு.

குற்றுகரத்தின்முன் சிலவிடங்களில் வல்லினம் இயல்பாகும்.

உயிரீறு, மெய்யீறு, குற்றுகர வீற்றுக்களின்முன் வல்லினம் முதலாயின வரும்போது இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி ஆகும்.

3. வடமொழிச் சந்தி

வடமொழிச் சொற்கள் ஒன்றோடொன்று புணர்வது வடமொழிச் சந்தி எனப்படும்.

(i) தீர்க்க சந்தி

குண + அதிசயம் = குணாதிசயம்
சதா + ஆநந்தம் = சதாநந்தம்
கிரி + ஈசன் = கிரீசன்
மகி + இந்திரன் = மகீந்திரன்
குரு + உபதேசம் = குரூபதேசம்

இவ்வாறு வருவது தீர்க்க சந்தி எனப்படும்.

நிலைமொழியீற்றில் உள்ள அ-ஆ, இ, ஈ, உ, ஊ என்னும் எழுத்துக்களின்முன் வருமொழி முதலில் அவ்வவ்வெழுத்துக்கள் வரின் ஈறும் முதலும் கெட்டு அவ்வின நெடில் ஒன்று தோன்றுவது தீர்க்க சந்தி ஆகும்

(ii) குண சந்தி

நர + இந்திரன் = நரேந்திரன்
மகா + ஈசன் = மகேசன்
சுத்த + உதகம் = சுத்தோதகம்
ஞான + உதயம் = ஞானோதயம்

இவ்வாறு வருவது குண சந்தி எனப்படும்.

நிலைமொழியீற்றில் உள்ள 'அ - ஆ' முன் வருமொழி முதலில் 'இ-ஈ' வரின் ஈறும் முதலும் கெட்டு 'ஏ' தோன்றுவதும், 'அ - ஆ' முன் 'உ - ஊ' வரின் ஈறும் முதலும் கெட்டு 'ஓ' தோன்றுவதும் குண சந்தி ஆகும்.

(iii) விருத்தி சந்தி

குண + ஏகன் = குணைகன்

மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்

வன + ஓஷதி = வனௌஷதி

மகா + ஔஷதம் = மகௌஷதம்

இவ்வாறு வருவது விருத்தி சந்தி எனப்படும்.

நிலை மொழியீற்றில் உள்ள 'அ - ஆ' முன் வருமொழி முதலில் 'ஏ – ஐ' வரின் ஈறும் முதலும் கெட்டு 'ஐ' தோன்றுவதும், 'அ - ஆ' முன் 'ஓ - ஔ' வரின் ஈறும் முதலும் கெட்டு 'ஔ' தோன்றுவதும் விருத்தி சந்தி ஆகும்.

தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்தி சந்தி என வடமொழிச் சந்தி (புணர்ச்சி) மூன்று வகைப்படும்.

V. யாப்பு

1. நால்வகைப் பாக்களின் பொது இலக்கணம்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பாக்கள் நான்கு வகைப்படும்.

(i) வெண்பா

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

இது இரண்டடிகளால் வந்த குறள் வெண்பா.

நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட் (டு)
எல்லார்க்கும் பெய்யு மழை.

இது நான்கடிகளால் வந்த நேரிசை வெண்பா.

இரண்டடி முதலாகப் பலவடிகளில் ஈற்றடி முச்சீரடியாக வும் ஏனையவடிகள் நாற்சீரடிகளாகவும் வந்து, வெண்டளை பிழையாது மாச்சீரும், விளச்சீரும், காய்ச்சீரும் பெற்று இறுதிச் சீர் (நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளில் ஒன்றினைக் கொண்ட) ஓரசைச் சீராக நின்று முடிவது வெண்பா ஆகும்.

(ii) ஆசிரியப்பா

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.

இது மூன்றடிகளால் வந்த ஆசிரியப்பா.

மூன்றடி முதலாகப் பலவடிகளில் ஆசிரிய உரிச் சீர்கள் நான்கினைக் கொண்ட அளவடிகளாக வந்து, இறுதிச்சீர் 'ஏ,ஓ' என முடிவது ஆசிரியப்பா ஆகும்.

ஈற்றயலடி முச்சீராய் வருவது நேரிசையாசிரியப்பா.

(iii) கலிப்பா

[தரவு]

வாணெடுங்கண் பனி கூற வண்ணம்வேறுய்த்திரிந்து
தோணெடுந்த கை துறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூண்டயங்குந் தனங்கண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ.

[தாழிசை]

சூருடைய கடுங்கானஞ் சொலற்கரிய வென்பவால்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே;
சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே;
சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே என்பவால்
புலம்படைந்து நலந்தொலையப் போவாரோ பொருளிலரே;

[தனிச் சொல்]

என வாங்கு,

[சுரிதகம்]

அருளெனு மிலராய்ப் பொருள் வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியார்
பொன்னெடுந் தேரோடு தானையிற் பொலிந்தே.

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் முதலான உறுப்புக்களைப் பெற்றுப் பெரும்பாலும் கலித்தளை தழுவித் துள்ளல் ஓசையுடையதாய் வருவது கலிப்பா ஆகும்.

கலிப்பாவில் மாச்சீரும் விளங்கனிச்சீரும் வரா.

(iv) வஞ்சிப்பா

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச் சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்

நாளும்,

மகிழ மகிழ்தூஉங் கூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே

பெரும்பாலும் வஞ்சித் தளைகளைக் கொண்ட இருசீர் அடியாலேனும் முச்சீரடியாலேனும் மூன்று முதலாகப் பலபடிகளைக் கொண்டு தனிச் சொல்லும் அகவற் சுரிதகமும் பெற்று வருவது வஞ்சிப்பா ஆகும்.

2. அசை, சீர் இவற்றின் இலக்கணமும் வாய்பாடும்.

(i) அசை

சேர்த்துப்படி	பிரித்துப்படி
1. அறஞ் செய விரும்பு	1. அறஞ்-செய, விரும்-பு
2. நூல் பலகல்	2. நூல்-பல-கல்
3. நன்மை கடைப்பிடி	3. நன்-மை, கடைப்-பிடி
4. ஈவது விலக்கேல்	4. ஈ-வது, விலக்-கேல்
5. அழகலா தன செயேல்	5. அழ-கலா, தன-செயேல்

இவ்வடிகளில் பல அசைகள் வந்துள்ளன. ஒவ்வோரசையிலும் ஒன்றும் பலவுமாகிய எழுத்துக்கள் உள்ளன.

தனித்தனியே நிற்கும் எழுத்துக்கள் ஒன்றோடொன்று சேர்ந்து ஒலியசைவுடன் இசைகொள்ள நிற்பது அசை எனப்படும்.

ஈ–(வது), ஈ என்னும் நெடில் முதலில் வந்துள்ளது.

(விரும்-)பு. பு என்னும் குறில் ஈற்றில் வந்துள்ளது.

நூல். நெடில் ஒற்றுடன் சேர்ந்து வந்துள்ளது.

கல். குறில் ஒற்றுடன் சேர்ந்து வந்துள்ளது.

இவ்வாறு வருவது நேரசை எனப்படும்.

குறிலேனும் நெடிலேனும் தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்த்து வந்தாலும் நேரசை ஆகும்.

அழ. குறில் இணைந்து வந்துள்ளன.

கலா. குறில் நெடில் சேர்ந்து வந்துள்ளன.

அறம் குறிலிணைந்து ஒற்றுடன் வந்துள்ளன.
செயல். குறில் நெடில் ஒற்றுடன் வந்துள்ளன.
இவ்வாறு வருவது நிரையசை எனப்படும்.

குறிலிணையேனும் குறில் நெடிலேனும் தாமாக வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நிரையசை ஆகும்.

நேரசை, நிரையசை என அசை இரண்டு வகைப்படும்.

குறிப்பு: மெய்க்குத் தனியே ஒலிக்கும் ஆற்றலின்மையின் மற்ற எழுத்துக்களுடன் சேர்ந்தே ஒலிக்கும். குறில் முதலில் தனித்து நின்று நேரசையாக வராது. அ-ஆ என விட்டிசைத்து வரும்போதுமட்டும் முதலில் குறில் நேரசையாக வரும். இடையில் இரு குறில்கள் சேர்ந்து வரும்போது நிரையசையாகும். குறிலுடன் நெடில் சேர்ந்து நிரையசையாகுமேயன்றி, நெடிலும் குறிலும் சேர்ந்து நிரையசையாக வராது. நெடிலும் குறிலும் வருமிடங்களில் நேர் நேர் எனக் கொள்ள வேண்டும்.

(ii) சீர்

அசைகள் தனித்தேனும் இரண்டு முதலாகத் தொடர்ந்தேனும் இசைந்து நிற்பது சீர் எனப்படும்.

தனியசைச்சீர்—ஓரசைச்சீர்

கு, கா, கல், கால். நேரசையா லான ஓரசைச் சீர்கள்.

பலர், புலால். நிரையசையா லான ஓசைச் சீர்கள்.

இவ்வாறு வருவன ஓரசைச் சீர்கள் எனப்படும்.

நேரசையாவது நிரையசையாவது தனித்து நின்று சீராக வரின் அது ஓரசைச்சீர் ஆகும்.

ஓரசைச்சீர்கள் வெண்பாவின் இறுதியில் வரும். வெண்பாவின் ஈற்றில் வரும் குற்றுகரவீற்றுச் சொற்களையும் ஓரசைச்சீர்கள் போலவே கொள்ளவேண்டும்.

நேரசையுடன் குற்றுகரம் சேர்ந்து வந்த சொற்களை நேர்பு அசை என்றும், நிரையசையுடன் குற்றுகரம் சேர்ந்து வந்த சொற்களை நிரைபு அசை என்றும் கூறவேண்டும்.

காட்டு : நாடு, சால்பு. நேர்பு அசை.
உலகு, உடைத்து. நிரைபு அசை.

சீர்களுக்குரிய வாய்ப்பாடுகள்

அசைகளால் ஆன சீர்களின் பாகுபாட்டை நினைப்பில் வைத்துக் கொள்வதற்காக ஏற்பட்ட சொற்கள் **வாய்பாடுகள்** எனப்படும். அவை தளைகளை அறிவதற்குப் பயனுடையனவாக அமையும்.

சொல்	அசை	வாய்பாடு	அசையும் வாய்பாடும்
கால்	நேர்	நாள்	**நேர்—நாள்**
கடல்	நிரை	மலர்.	**நிரை—மலர்**
நாடு	நேர்பு	காசு.	**நேர்பு—காசு**
உடைத்து	நிரைபு	பிறப்பு.	**நிரைபு—பிறப்பு**

மேற்கண்டநாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளில் ஒன்றைக்கொண்ட ஓரசைச் சீரினை ஈற்றடியின் இறுதிச் சீராகப் பெற்று வெண்பா முடியும்.

ஈரசைச் சீர்களும், வாய்பாடுகளும்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

இவ்வெண்பாவில் வந்துள்ள ஈரசைச் சீர்களையும் அவற்றிற்குரிய வாய்பாடுகளையும் அடியில் காண்க.

சொற்கள்	அசைப்பிரிவு	அசைகள்	வாய்பாடுகள்
கற்க	கற்-க	நேர்-நேர்	தேமா
அதற்குத்	அதற்-குத்	நிரை-நேர்	புளிமா
கசடறக்	கச-டறக்	நிரை-நிரை	கருவிளம்
கற்றபின்	கற்-றபின்	நேர்-நிரை	கூவிளம்

ஓரசைச் சீர்கள் இரண்டுடன் நேர் அசை நிரை அசைகளைத் தனித்தனி சேர்க்க ஈரசைச் சீர்கள் நான்கு ஆகும். இவற்றிற்குத் தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பன வாய்பாடுகள் ஆகும்.

ஈரசைச் சீர்கள் நான்கில் நேர் ஈற்றுச் சீர்கள் இரண்டும் தேமா, புளிமா என்னும் வாய்பாடுகளைக் கொண்டு **மா** என முடிதலால் **மாவீற்றுச்சீர்** அல்லது **மாச்சீர்** எனப்படும்.

நிரையீற்றுச் சீர்களிரண்டும் கருவிளம் கூவிளம் என்னும் வாய்பாடுகளைக் கொண்டு **விளம்** என முடிதலால் **விளவீற்றுச்சீர்** அல்லது **விளச்சீர்** எனப்படும்.

ஈரசைச் சீர்கள் நான்கும் **மாச்சீர், விளச்சீர்** என இரண்டு வகைப்படும். இவை **இயற்சீர்** எனப்படும். இவை அகவற்பாவிற்குரியவை. ஆதலால், **அகவற்சீர்-ஆசிரிய உரிச்சீர்** எனவும் பெயர் பெறும். இவை பெரும்பான்மை ஆசிரியப்பாவிலும், சிறுபான்மை வெண்பாவிலும் வரும்.

மூவசைச்சீர்களும், வாய்பாடுகளும்.

1. 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு' எனப்புகன்றார்.

சொற்கள்	அசைப்பிரிவு	அசைகள்	வாய்பாடுகள்
எண்ணென்ப	எண்-ணென்-ப	நேர்நேர்நேர்	தேமாங்காய்
எழுத்தென்ப	எழுத்-தென்-ப	நிரைநேர்நேர்	புளிமாங்காய்
எனப்புகன்றார்	எனப்-புகன்-றார்	நிரைநிரைநேர்	கருவிளங்காய்
இவ்விரண்டும்	இவ்-விரண்-டும்	நேர்நிரைநேர்	கூவிளங்காய்

இவை ஈரசைச்சீர்கள் நான்கும் மற்றும் ஒரு நேரசையை இறுதியில் பெற்றுவந்த மூவசைச்சீர்கள். இவை நான்கும் நேர் ஈற்று மூவசைச்சீர்கள் ஆகும். இவற்றிற்குத் தேமாங்காய் முதலானவை வாய்பாடுகள் ஆகும். இவை **காய்** என்னும் வாய்பாட்டில் முடிதலால் **காயீற்றுச்சீர்** அல்லது **காய்ச்சீர்** எனப்படும். இவை வெண்பாவிற்குரிய சீர்கள் ஆதலின் **வெண் சீர் - வெண்பாவுரிச்சீர்** எனவும் பெயர் பெறும்.

மேற்கூறிய இயற்சீர்களும் இந்த வெண்சீர்களும் வெண்பாவில் வரும்.

2. 'பூந்தாமரைப் போதலமர
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்

சொற்கள்	அசைப்பிரிவு	அசைகள்	வாய்பாடுகள்
பூந்தாமரைப்	பூந்-தா-மரைப்	நேர்நேர்நிரை	தேமாங்கனி
வினைக்கம்பலை	வினைக்-கம்-பலை	நிரைநேர்நிரை	புளிமாங்கனி
வளவயலிடை	வள-வய-லிடை	நிரைநிரைநிரை	கருவிளங்கனி
போதலமர	போ-தல-மர	நேர்நிரைநிரை	கூவிளங்கனி

இவை ஈரசைச்சீர்கள் நான்கும் மற்றும் ஒரு நிரையசையை இறுதியில் பெற்று வந்த மூவசைச் சீர்கள். இவை நான்கும் நிரையீற்று மூவசைச்சீர்கள் ஆகும். இவற்றிற்குத் தேமாங்கனி முலாதனவை வாய்பாடுகள் ஆகும் இவை கனி என்னும் வாய் பாட்டில் முடிதலால் கனியீற்றுச்சீர் அல்லது கனிச்சீர் எனப்படும். இவை வஞ்சிப்பாவிற்குரிய சீர்கள் ஆதலின் வஞ்சிச்சீர்—வஞ்சியுரிச்சீர் எனவும் பெயர் பெறும். இவை வஞ்சிப்பாவில் வரும்.

ஈரசைச்சீர்கள் நான்குடன் நேர் அசை நிரை அசைகளைத் தனித்தனி சேர்க்க மூவசைச்சீர்கள் எட்டு ஆகும். நேரீற்று மூவசைச் சீர்கள் நான்கினுக்கும் தேமாங்காய் முதலான நான்கும், நிரையீற்று மூவசைச் சீர்கள் நான்கினுக்கும் தேமாங்கனி முதலான நான்கும் வாய்பாடுகள் ஆகும்.

மூவசைச்சீர்கள் எட்டும் காய்ச்சீர், கனிச்சீர் என இரண்டு வகைப்படும்.

நாலசைச் சீர்களும், வாய்பாடுகளும்.

மூவசைச் சீர்கள் எட்டுடன் ஈற்றில் நேர் அசை பெற்று வருவன எட்டும் நிரை அசை பெற்று வருவன எட்டும் ஆக நாலசைச் சீர்கள் பதினாறு ஆகும். இவை பொதுச்சீர் எனப்படும்.

இவை இப்படிவத்திற்கு வேண்டாவாதலின் விரிவாக விளக்கப்படவில்லை.

VI. அணி

உவமைகளுள் சில

உவமை அணி: உவமானத்தையும் உவமேயத்தையும் ஒரு வாக்கியத்தில் அமைத்து, இடையில் உவம உருபு மறைந்தேனும் வெளிப்பட்டேனும் வரும் வண்ணம் உரைப்பது உவமை அணியாகும். உருபுகள் மறைந்து வருவது தொகையுவமை என்றும், வெளிப்பட்டு வருவது விரியுவமை என்றும் கூறப்படும்.

காட்டு: பால் போலும் இன்சொல் } விரியுவமை
பவளம் போல் செந்துவர்வாய் }

தாமரை வாண்முகத் தழகும் } தொகை
காமருவேய்த் தோளழகும் } யுவமை.

எடுத்துக்காட்டுவமை அணி

தொட்டனைத் தூறும் மணற் கேணி; மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.

இதில் இரண்டு வாக்கியங்கள் அமைந்துள்ளன.

(1) தொட்டனைத் தூறும் மணற் கேணி;
(2) மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.

இவற்றில் முதல் வாக்கியம் உவமானமாய் அமைந்துள்ளது; இரண்டாவது வாக்கியம் உவமேயமாய் அமைந்துள்ளது. இரண்டிற்கும் இடையில் உவம உருபு முதலியவை கொடுக்கப்படவில்லை. ஆதலால், பொருளை விளக்கும் போது உவமான வாக்கியத்தைக் கூறி முடித்துவிட்டு, அதுபோல என்னும் சுட்டடுத்த

உவம உருபால் எடுத்துக்காட்டிப் பின் உவமேயவாக்கியத்தைக் கூறி முடிக்க வேண்டும். இவ்வாறு வருவது **எடுத்துக்காட்டுவமை** எனப்படும்.

உவமானத்தையும் உவமேயத்தையும் தனித்தனி வாக்கியங்களாக அமைத்து இடையில் உவம உருபு கொடாமல் கூறுவது எடுத்துக்காட்டுவமை அணி ஆகும்.

காட்டு: அகர முதல வெழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே யுலகு.

குறிப்பு: இயல்பான உவமையில் ஒரு வாக்கியத்தில் உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையில் உவம உருபு மறைந்து வரும். எடுத்துக்காட்டுவமையில் உவமானத்தைக் கூறும் ஒரு வாக்கியத்திற்கும் உவமேயத்தைக் கூறும் மற்றொரு வாக்கியத்திற்கும் இடையில் சுட்டடுத்த உவமை உருபு மறைந்து வரும். உவமையணி ஒரு வாக்கியத்தில் அமையும். எடுத்துக்காட்டுவமை அணி இரண்டு வாக்கியங்களில் அமையும்.

இல்பொருள் உவமை அணி

கரு ஞாயிறு போன்று தோன்றினான்.
இருகை வேழத்து இராகவன்.

இவற்றில் கரு ஞாயிறு, இருகை வேழம் என்பன இல்லாத பொருள்கள். இல்லாத பொருள்களை உவமானமாகக் கூறப்பட்டுள்ளன: இவ்வாறு கூறுவது **இல்பொருள் உவமை** எனப்படும்.

இல்லாத பொருளையும், நிகழாத செயலையும் உவமானமாக அமைத்துக் கூறுவது இல்பொருள் உவமை அணி ஆகும்.

காட்டு: குன்றெழுந்து சென்றதெனச் சென்றான்,

ஐய உவமை அணி

"தாதுண்டு வண்டு தடுமாறும் தாமரையோ
மாதர் விழி யுலவும் வாண்முகமோ"

இதில் தாமரையோ முகமோ என ஐயம் தோன்று வதாக உவமான உவமேயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவ்வாறு ஐயம் தோன்ற வருவது ஐயவுமை எனப்படும்.

இது உவமானமா உவமேயமா என்று ஐயம் தோன்று மாறு கூறுவது ஐய உவமை அணி ஆகும்.

2. வேற்றுப் பொருள் வைப்பு

எண்ணும் பயன்றாக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாமன் அருள் வளர்க்கும் —
மின்னுறுந்தேன்
பூத்தளிக்கும் தாராய்! புகழாளர்க் கெவ்வுயிருங்
காத்தளிக்கை யன்றோ கடன்.

இதில் 'வாமன் யார்க்கும் அருள் வளர்க்கும்' என்பதைக் கூற வந்தவர், அதனை உறுதிப்படுத்த 'புகழாளர்க்கு எவ்வுயிரும் காத்தளிக்கை அன்றோ கடன்.' என வேறு பொருளையும் வைத்து விளக்கு கின்றார். இவ்வாறு கூறுதல் **வேற்றுப்பொருள் வைப்பு** எனப்படும்.

கூறக்கருதிய பொருளை உறுதிப்படுத்துவதற்கு வேறொரு பொருளையும் உடன் சேர்த்துக் கூறுவது வேற்றுப் பொருள் வைப்பு அணி ஆகும்.

3. உருவகங்களுள் சில

உருவகவணி: ஒரு வாக்கியத்தில் உவமேய உவமானங்களை ஒன்றுபடுத்திக் கூறுவது உருவக அணியாகும்.

இடையில் ஆகிய முதலான பண்புருபுகள் மறைந்து வருவது **தொகையுருவகம்** என்றும், வெளிப்பட்டு வருவது **விரியுருவகம்** என்றும் கூறப்படும்.

காட்டு: பிறவிக்கடல் – தொகைஉருவகம்.
பிறவியாகிய கடல் – விரிஉருவகம்.

ஏகதேச உருவகம்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

'இறைவன் அடியாகிய புணையைச் சேராதவர் பிறவியாகிய பெரிய கடலை நீந்தார்; சேர்ந்தவர் நீந்துவர்' என்பது இதன் பொருள். இதில் பிறவியைக் கடலாக உருவகம் செய்து, இறைவன் அடியை (கடலை நீந்துவதற்குரிய) புணையாக உருவகம் செய்யவில்லை. இவ்வாறு வருவது **ஏகதேச உருவகம்** எனப்படும்.

ஒரு தொடரில் வரும் பல பொருள்களுள் ஒரு பொருளை உருவகப்படுத்தி மற்ற பொருள்களை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

முற்றுருவகம்

காட்டு: விழியே கருவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல் – மொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவைத் திருமுகமே
தாமரையென் னுள்ளத் தடத்து

இதில் விழி வண்டு, நகைதாது, மொழி தேறல், முகம் தாமரை, உள்ளம் தடம் என முற்றும் உருவகம் செய்யப்பட்டுள்ளன. இது முற்றுருவகம் எனப்படும்.

ஒரு தொடரில் வரும் தொடர்புடைய பொருள்கள் முழுதும் உருவகம் செய்யப்படுவது முற்றுருவக அணி ஆகும்.

இயைபு உருவகம்

"செவ்வாய்த் தளிரும் நகைமுகிழும் கண்மலரும்
மைவா ரளக மதுகரமும்"

இதில் ஒன்றற்கொன்று இயைபுடைய பல பொருள்களை இயைபுடைய பல பொருள்களாக உருவகஞ் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு வருவது **இயைபு உருவகம்** எனப்படும்.

வாய், பல், கண், கூந்தல் இயைபுடைய பொருள்கள், தளிர், முகிழ், மலர், மதுரகம் (வண்டு) இயைபுடைய பொருள்கள்.

பல பொருள்களை உருவகம் செய்யுங்கால் தம்முள் இயைபுடையனமாக வைத்து உருவகம் செய்வது இயைபு உருவக அணி ஆகும்.

சிறப்புத் தமிழ்த் தேர்ச்சிக்குரிய சேர்க்கை

சிறப்புத் தமிழ்க்குரிய மதிப்பெண் (மார்க்கு) 100. இதில் உரைப்பகுதி செய்யுட்பகுதிகளுக்கு 50-ம் இலக்கணத்திற்கு 25-ம் தன்முயற்சி, இலக்கியச்சுவையுணர் திறன், கற்பனை ஆற்றல் இவற்றிற்கு 25-ம் ஆகப் பகுக்கப் பட்டுள்ளது.

இலக்கணப்பகுதியில் கவனிக்கவேண்டியவை

சொல் இலக்கணம்: பெயர், வினை, இடை, உரி, எச்சம், ஆகுபெயர், வினையாலணையும் பெயர் என்பவற்றில் எது என்பதை எழுதவேண்டும்.

உறுப்பிலக்கணம்: பகுதி, விகுதி இடைநிலை, சாரியை, சந்தி விகாரம், எழுத்துப்பேறு முதலானவற்றையும், பகுதி இரட்டித்தும் வேறுவிகுதிகள் பெற்றும் பிறவகையிலும் காலங்காட்டும் விவரங்களையும் எழுதவேண்டும்.

தொடர் இலக்கணம்: அல்வழி வேற்றுமையில் வரும் தொகைநிலைத்தொடர் தொகா நிலைத்தொடர்களில் என்ன தொடர் என்பதை எழுதவேண்டும்.

வேற்றுமைப் பொருள்: இன்ன வேற்றுமையின் இன்ன உருபு இன்ன பொருளில் வந்துள்ளதென்பதையும், உருபு மயக்கம் முதலானவற்றையும் எழுதவேண்டும்.

அணி விளக்கம்: இன்ன அணி இவ்வாறு அமைந்து உள்ளதென்பதையும், உவமை முதலானவற்றைப் பொருளொடு பொருத்திக் காட்டியும் எழுதவேண்டும்.

தொடை: மோனை, எதுகை முதலான தொடைகள் அமைந்துள்ளவற்றை எழுதவேண்டும்.

அலகிடுதல் தளை விளக்கல்: சீர்களை அசைகளாகப்பிரித்து வைத்து நேமா முதலாகிய வாய்பாடுகளை எழுதுவது சீர்பிரித்து வாய்பாடு கூறுதல்-அலகிடுதல் எனப்படும். சீரொடு சீர்சேரும்போது இடையில் தோன்றும் தளைகளை எழுதுவது தளைவிளக்குதல் எனப்படும்.

தன் முயற்சி (Self Effort): எந்தச் செய்யுட்கள் வந்தாலும் தன் முயற்சியால் பொருளும் கருத்தும் அறிந்து கொள்வது தன்முயற்சி எனப்படும். இதற்கு உரிய முறைகள் வருவன.

1. செய்யுளைப் பன்முறை படித்துப் பொதுப் பொருளை ஒருவாறு உணர்ந்துகொண்டு, எழுவாய், விளி இவற்றை எடுத்து, எச்சங்களையும், பிற சொற்களையும், பயனிலையையும் கொண்டு கூட்டி அமைத்துத் தெளிவான பொருளையும் கருத்தையும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். பொருள்களை விளக்க வந்துள்ள அணி வகைகள், பழமொழிகள், நீதிகள் இவற்றையும், நேர்க்கூற்று, கவிக்கூற்று, கவியின் கருத்து, இவற்றையும் அறிந்து கொள்ளவேண்டும்.

இலக்கியச்சுவையுணர்திறன் (Literary Appreciation)

1. செய்யுட்களைப் பன்முறை படித்துப் பொருளும் கருத்தும் அறிந்தபின் அவற்றில் அமைந்துள்ள சொல்நயம், பொருள்நயம், அடைமொழிச் சிறப்புநயம், உவமை முதலான அணிநயங்கள், தொடைநயம், நடைநயம், உள்ளுறை, சுவை நயங்கள் கவியின் கூற்றில் அமைந்துள்ள கற்பனை நயங்கள், குறிப்பாக அமைத்துள்ள பிற பொருள்கள் முதலானவற்றையும், கவி கருதிய பயனையும், இவற்றால் நாம் அடையும் பயனையும் இயன்ற வரையில் எடுத்து விளக்குதல் இலக்கியச் சுவை யுணர்தல் – நலம் பாராட்டல் ஆகும்.

இச்சொல் இவ்விடத்தில் இன்ன காரணத்தால் வந்துள்ளது, இப்பொருளைத் தருகிறதென்பதை விளக்குதல் சொல்நயம், பொருள்நயம் ஆகும். உள்ளே மறைந்து உள்ள குறிப்பு இன்னதென்பது உள்ளுறை (மூன்னம்) எனப்படும். நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமனிலை என்னும் சுவைகளை விளக்குதல் சுவைநயம் எனப்படும். கவி கற்பித்துக்கொண்டதை விளக்குவது கற்பனைநயம்

எனப்படும். கவி வாழ்ந்த காலச் சூழ்நிலை, வரலாறு நூல் செய்த காரணம், நூலால் உணர்த்தும் உண்மை முதலானவற்றைக் குறிப்பால் அறிந்து வெளியிடுதல் பிற குறிப்பு நயங்கள் எனப்படும்

கற்பனையாற்றல் (Creative ability)

எதைப்பற்றி எழுதுவதாயினும் அதைப்பற்றி நன்கு சிந்தித்து, அதற்கு வேண்டியவைகளைப் பலவகையில் திரட்டிச்சேர்த்தும், கற்பனையாற்றலால் பலவற்றை அமைத்தும் அவற்றைத் தொகைவகைப்படுத்தி வைத்துக் கொண்டு, ஒவ்வொரு பிரிவையும் எடுத்துக்கொண்டு விரிவாக எழுவது **கட்டுரை** எனப்படும். இதற்குப் புதிய புதிய கருத்துக்களைச் சிந்தித்துப் படைக்கும் கற்பனைத் திறன் வேண்டும் சிறந்த நடையில் நயங்களுடனும், சுவையுடனும் எழுதும் ஆற்றல் வேண்டும்

அன்பு, அருள், அறம், ஒழுக்கம், ஊக்கம், கடமை முதலானவற்றைப் பற்றியவை **பொருள்பற்றிய கட்டுரை** ஆகும். காலை, மாலை, கடல், மலை, ஆறு, நீர் வீழ்ச்சி, சோலை, முதலானவற்றைப் பற்றியவை **வருணைக் கட்டுரை** ஆகும். கோயில், திருவிழா, அணைகள், தொழிற்சாலை கள், சிற்ப நிலையங்கள், புத்தகசாலைகள், பள்ளிகள் இவற்றைச் சென்று கண்டு எழுதுவது **காட்சிக் கட்டுரை** ஆகும். புலவர்கள், அரசர்கள், விஞ்ஞானிகள், தொண்டர் கள் முதலானவர்களைப்பற்றி எழுதுவது **வரலாற்றுக் கட்டுரை** ஆகும். நாடு, மக்கள், தொழில்கள், வாழ்க்கை முதலானவை எவ்வாறு அமைய வேண்டுமென்பதைக் கற்பனை செய்தெழுவது **கற்பனைக் கட்டுரை** ஆகும். மக்களுக்கு நல்லொழுக்கம் புகட்டவும், உண்மை நெறி காட்டவும், அறியாமையை ஓட்டவும், அறிவை நிலைநாட்டவும் கருதிப் புனைந்தெழுதுவது **புனைந்துரை கட்டுரை** ஆகும். ஒவ்வொரு பொருளைப்பற்றியும் முறையாக ஆராய்ச்சி செய்து எழுது

வது **ஆராய்ச்சிக் கட்டுரை** ஆகும். உரிமையாட்சி, குடிமைப் பயிற்சி, ஐக்கியநாட்டுக் கழகம், பிறநாட்டின் தொடர்பு, சட்டங்கள், திட்டங்கள், படையும் பாதுகாப்பும், மாணவர் படைப்பயிற்சி முதலானவற்றைப்பற்றி எழுதுவது **அரசியல் கட்டுரை** ஆகும். கல்வி கேள்வி, ஆராய்ச்சி, இலக்கியம், தாய்மொழி வளர்ச்சி, கலைவளர்ச்சி விஞ்ஞான வளர்ச்சி முதலானவற்றைப்பற்றி எழுதுவது **அறிவியல் கட்டுரை** ஆகும். நாட்டின் இயற்கைவளம் வளம் பெருக்குவதற்குரிய முறைகள், திட்டங்கள், நீர்த்தேக்கங்கள், விளைபொருள்கள், மறைந்துகிடக்கும் வளங்கள், அடிப்படைக்கல்வி, குடிசைத் தொழில், தொழிற்கல்வி மூலப்பொருள்கள், பொருள் சுழற்சி, வாணிகம், பொருள் மதிப்பு முதலானவைகளைப்பற்றி எழுதுவது **பொருளியற் கட்டுரை** ஆகும் சமூக ஒற்றுமை வேற்றுமை நீக்கம், தீண்டாமை ஒழிப்பு, சாதிமுறை ஒழிப்பு, சமத்துவ வாழ்க்கை, மூடப்பழக்க வழக்க நீக்கம், குருட்டு நம்பிக்கை, போலித் துறவிகளின் போக்கு மக்கள் ஏமாற்றம், உண்மைத் துறவிகளின் தொண்டு, சமூகசேவை இவற்றைப்பற்றி எழுதுவது **சமூக முன்னேற்றக் கட்டுரை** ஆகும்

வினாக்கள்

1. சார்பெழுத்துக்கள் எத்துணை வகைப்படும்? விளக்குக.

2. மொழி முதற் போலியைக் காட்டுடன் விளக்குக.

3. மொழியிடை, கடைப்போலிகளைக் காட்டுடன் விளக்குக.

4. தற்சமம், தற்பவம் இவற்றை விளக்குக. வடசொல் தமிழில் தற்பவமாக வரும்போது எவ்வெவ்வெழுத்துக்களாகத் திரியும்.

5. தத்தி தாந்த நாமம் என்பது யாது? காட்டுடன் எழுதுக

6. அறுவகையான ஆகு பெயர்களைக் காட்டுடன் எழுதுக.

7. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையில் உள்ள வேற்றுமைகளின் உருபுகளையும் அவற்றின் பொருளையும் எழுது.

8. எட்டாம் வேற்றுமை ஏற்ற பெயர்கள் எவ்வெவ்வாறு வரும்?

9. தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று இவற்றை விளக்குக.

10. பெயரெச்ச முடிபு, வினையெச்ச முடிபுகளைக் காட்டுடன் விளக்குக.

11. தன்வினை பிறவினையாகும் வகைகளைக் காட்டுடன் விளக்குக.

12. செய்வினை செயப்பாட்டு வினையாகும்போது எவ்வாறாகும்?

13. ஏகார விடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்?

14. ஓகார விடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்?

15. மற்று, தான் என்னும் இடைச்சொற்கள் எவ்வெப் பொருள்களில் வரும்?

16. ஒரு குணந்தழுவிய உரிச்சொல், பல குணந்தழுவிய உரிச்சொல் இவற்றைக் காட்டுடன் விளக்குக.

17. தொகாநிலைத் தொடர் எத்துணை வகைப்படும்? ஒவ்வொன்றின் வகைகளையும் காட்டுடன் எழுதுக.

18. தொகைநிலைத்தொடர் எத்துணை வகைப்படும்? ஒவ்வொன்றின் வகைகளையும் காட்டுடன் விளக்குக.

19. அன்மொழித் தொகை என்பது யாது? அது எத்துணை வகைகளில் வரும்? காட்டுடன் எழுதுக.

20. குறிப்புச் சொற்கள் எத்துணை வகைகளில் வரும்? காட்டுடன் எழுதுக.

21. திணை, பால் வழுவமைதி எவ்வெக் காரணங்களால் வரும்? காட்டுடன் எழுது.

22. எண், இடவழுவமைதியை விளக்கிக் காட்டுடன் எழுது.

23. ஒன்றுமுதல் பத்துவரையுள்ள எண்கள் எவ்வெவ்வாறு புணரும்?

24. இயல்பு புணர்ச்சியில் வரும் உயிர்ஈறு மெய்ஈறுகள் எவை? எவை?

25. வடமொழிச் சந்தி எத்துணை வகைப்படும்? ஒவ்வொன்றையும் காட்டுடன் விளக்குக.

26. நால்வகைப்பாக்கள் எவை? இவற்றின் பொது இலக்கணம் யாவை?

27. நேரசை, நிரையசை இவற்றை விளக்குக.

28. ஓரசைச் சீர்கள் எத்துணை? அவற்றிற்குரிய வாய்பாடுகள் எவை?

29. ஈரசைச் சீர்களையும் அவற்றின் வகைகளையும் வாய்பாடுகளையும் விளக்குக.

30. மூவசைச் சீர்களையும் அவற்றின் வகைகளையும் வாய்பாடுகளையும் விளக்குக.

31. உவமை, எடுத்துக்காட்டு உவமை, இல்பொருள் உவமை, ஐயஉவமை இவற்றைக் காட்டுடன் விளக்குக.

32. வேற்றுப்பொருள் வைப்பு அணியைக் காட்டுடன் விளக்குக.

33. உருவகம், ஏகதேசஉருவகம், முற்றுருவகம், இயைபு உருவகம் இவற்றை விளக்குக.

34. உறுப்பிலக்கணம், தொடர் இலக்கணம் எவ்வாறு எழுதவேண்டும்?

35. வேற்றுமைப் பொருள், அணி இலக்கணம், அலகிடுதல் இவற்றை எவ்வாறு எழுதவேண்டும்?

36. நலம் பாராட்டல் பகுதியில் எவ்வெவற்றை விளக்கவேண்டும்?

37. கட்டுரைகளை எவ்வாறு வகைப்படுத்தி எழுத வேண்டும்?

TAMIL NADU NOOL PATHIPPAGAM
WORAIUR, TIRUCHIRAPALLI

Wrapper Printed at Vasan Press, Allimal Street, Tiruchi.